# இலக்கு

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

இதழ் : 13 ★ 17.02.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com




## எமக்கான பாடம் எமது எதிரியிடமே உள்ளது அதனை முதலில் கண்டறிவோமாக

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

## எமக்கான நீதி கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை

வடக்கு கிழக்கு இணைந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குடும்பங்களின் சங்கம்




Julian Braithwaite
UK's Ambassador to UN on the resolution on Srilanka

## தலைமை ஏற்கும் பிரித்தானியா தமிழருக்கு சாதகமா?

சுடரவன்

## தமிழர்களுக்கு சலுகைகளை தந்து உரிமைகளை பறிக்க நினைக்கிறார் ரணில்.

விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



## ஐ.நாவின் மனித உரிமை சாசனத்திற்கு அமைவாகவே பல்கலைக்கழகத்தில் நினைவுத்தூபி அமைத்துள்ளோம்.



யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.பி.எஸ்.பபிலராஜ்

# மார்ச் 8இல் வெளியாகிறது ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை

சிறிலங்கா தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள, ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வரும் மார்ச் 8ஆம் நாள் வெளியாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணிமனையை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கை இன்னமும் இறுதி செய்யப்படவில்லை என்றும், எனினும், மார்ச் 8ஆம் நாள் நண்பகல் அது வெளியிடப்பட வாய்ப்புள்ளதாகவும், அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்த அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படுவதற்கு முன்னதாக, சிறிலங்கா அரசாங்கத்துக்கு அதன் பிரதி ஒன்று வழங்கப்படும். அறிக்கையை ஆராய்ந்து பதிலளிப்பதற்கு வசதியாகவே சிறிலங்கா அரசாங்கத்துக்கு முன்கூட்டியே பிரதி ஒன்று வழங்கப்படவுள்ளது. அதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இன்னமும் சிறிலங்கா அரசாங்கத்துடன் பகிரப்படவில்லை என்று சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரோஜா சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை வரும் மார்ச் 20ஆம் நாள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அதிகாரபூர்வமாக சமர்ப்பிக்கப்படும்.

இந்தக் கூட்டத்தொடரில் சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பில் உயர்மட்டக் குழுவொன்று பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், ஜெனிவா கூட்டத்தொடரில் பங்கேற்கும் குழுவின் பிரதிநிதிகள் தொடர்பாக இன்னமும் முடிவு எடுக்கப்படவில்லை என்றும், சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சரோஜா சிறிசேன தெரிவித்துள்ளார்.

# தமிழர்களுக்கு சலுகைகளை தந்து உரிமைகளை பறிக்க நினைக்கிறார் ரணில். விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு சலுகைகளை வழங்குவதாகத் தெரிவித்து தமிழர்களின் உரிமைகளை பறிக்க முயல்வதாக முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றம்சாட்டியுள்ளார்.நல்லூரில் அமைந்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தில் கட்சியின் இளைஞரணி அமைப்பாளர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

பிரதம மந்திரியின் பேச்சுக்களின் தாற்பரியம் என்ன? நாங்கள் உங்களுக்கு பல கோடிகளை கொட்டிக் கொடுக்க உள்ளோம். எங்களின் இந்தக் கொடைக்காக நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றைத்தான். அதாவது மன்னித்து மறந்து விடுங்கள். பழையனவற்றை மறந்து விடுங்கள். உண்மையைக் கண்டறிய முனையாதீர்கள். அப்படிக் காண விழைந்தால் உங்களின் இளைஞர்கள் செய்த குற்றங்களும் அம்பலத்துக்கு வந்து விடும்.

நாம் செய்வதாகக் கூறியவற்றை இதுகாறும் செய்யவில்லை. இப்போது உங்களுக்கு சலுகைகளைக் கொடுக்க எண்ணியுள்ளோம். கட்சி ரீதியாக அதைச் செய்ய எண்ணியுள்ளோம். ஏற்றுக்கொண்டு உங்கள் உரிமைகளைக் கேளாதீர்கள், உரித்துக்களை நிலைநாட்டப் பார்க்காதீர்கள். தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து நிலைக்கச் செய்ய உங்களின் ஒத்துழைப்பை நல்குங்கள். ஜெனிவாவில் மீண்டும் கால அவகாசம் பெற்றுக் கொடுங்கள்

தொடர்ச்சி 9 ஆம் பக்கம் ➔

# இலங்கையில் தொடரும் சித்திரவதைகள்; நாட்டை விட்டு வெளியேறியும் அவதிப்படும் ஈழத்தவர்கள்!

இலங்கையில் இன்றும் தொடரும் சித்திரவதைகள், ஆட்கடத்தல் காரணமாக போலி கடவுட்டுச்சீட்டுகள் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகமான *sky* செய்தி நிறுவனம் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து சென்று பிரித்தானியாவில் அகதி தஞ்சம் கோரியுள்ள சிலருடனான நேர்காணலையடுத்தே குறித்த நிறுவனம் இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது

மேலும் இவ்வாறு இலங்கையிலிருந்து போலி கடவுட்டுச்சீட்டுகள் மூலம் வெளிநாடுகள் சென்று அகதி தஞ்சம் கோரும் இலங்கையர்கள், அந்தந்த நாடுகளில் அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாமல் கடும் துன்பங்களை எதிர்கொண்டு வருவதாகவும், இவர்களில் சிலருக்கு ஆலயங்களும், தொண்டு நிறுவனங்களும் தங்குவதற்கு இடம் வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறாக இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்பவர்களின் வாழ்க்கை மிகவும் கடினமானது எனவும் குறித்த செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பன்னாட்டு நீதி விசாரணை கோரியும் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் நூற்றிற்கும் மேற்பட்ட பன்னாட்டு அமைப்புகள் ஐ.நா சபையிடம் கோரிக்கை

பார்சிலோனா மாநகர சபையினால் கடந்த 25.01.2019 அன்று சிறீலங்கா அரசின் தமிழின அழிப்பிற்கெதிரான பன்னாட்டு நீதி விசாரணை மற்றும் ஈழத் தமிழரின் இறையாண்மையையும் வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் ECOSOC (UN Economic and Social Council) அங்கீகாரம் பெற்ற, 39 நாடுகளைச் சேர்ந்த 118 சர்வதேச அமைப்புக்களும், உலகளாவிய ரீதியில் இயங்குகின்ற 3000 பொது அமைப்புக்களும் கூட்டாக ஒன்றிணைந்து சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்பிற்கும், தொடரும் கட்டமைப்பு சார் தமிழின அழிப்பிற்கும் அனைத்துலக நீதி விசாரணை வேண்டியும், ஈழத்தமிழர்களின் இறையாண்மையை வலியுறுத்தியும் ஐக்கிய நாடுகள் சபைக்கு கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரு தீர்மானங்களும் தமிழர் இயக்கத்தின் அயராத முயற்சிக்கும், ஈழத் தமிழர் பிரச்சனையை சர்வதேச மயப்படுத்தப்படுவதனூடாகவே எமக்கான நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியுமென்ற இலக்கை நோக்கிய உழைப்பிற்கும் கிடைத்த வெற்றியாகும்.

இக் கோரிக்கை மனுவானது, 2015 ஆம் ஆண்டில் வட மாகாண சபையால் கொண்டுவரப்பட்ட தமிழின அழிப்பிற்கெதிரான தீர்மானத்தினதும், ஈழத்தமிழர்களின் இறையாண்மை கோரிக்கையினையும் அடிப்படையாகக் கொண்டதாகவே அமையப்பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ் வடமாகாண சபைத் தீர்மானமானது, ஐ.நா விற்கும், சர்வதேச நாடுகளிற்கும், அனைத்துலக நிறுவனங்களிற்கும் தமிழர் இயக்கத்தினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், 118 இற்கும் அதிகமான ஐக்கிய நாடுகள் சபையின் ECOSOC அங்கீகாரம் பெற்ற அமைப்புகளின் அங்கீகாரத்துடனும் 3000 பன்னாட்டு அமைப்புக்களின் ஆதரவுடனும் ஐ.நா சபைக்கு சமர்ப்பிக்கப்படுவது இதுவே முதற் தடவையாகும். விசேடமாக ஐ.நா மனித உரிமைகள் சபையினால் சிறீலங்கா அரசிற்கு வழங்கப்பட்ட கால நீடிப்பு எவ்வித முன்னேற்றமுமின்றி முடிவடைந்த இந் நிலையில் மார்ச் மாதம் இடம்பெறவிருக்கும் 40 வது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட இக் கோரிக்கை மனுவானது சிறீலங்கா சார்ந்த ஐ.நா வின் தீர்மானங்களில் தாக்கம் செலுத்தும் காரணியாக அமையுமென்பது திண்ணம்.

குறிப்பாக இக் கோரிக்கை மனுவில் கையொப்பமிட்டுள்ள அமைப்புக்களால், இவ் விடயமானது தமது நாட்டு மக்கள் மத்தியிலும் மற்றும் அரச தரப்பினரின் கவனத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது. இச் செயற்பாடானது, ஈழத் தமிழர் பிரச்சனை உலகளாவிய ரீதியாக பல்லின மக்களிடையேயும் பன்னாட்டு அரச தரப்பினரிடையேயும் ஓர் முக்கிய பேசு பொருளாக்கப்பட்டுள்ளதானது, எம் இலக்கை எட்டுவதற்கான பயணத்தின் ஓர் முக்கிய படிக்கல்லாகும் என தமிழர் இயக்கத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் ஐ.நா அதிகாரிக்கே பாதுகாப்பில்லை. - இலங்கை சனாதிபதி மைத்திரியிடம் முறைப்பாடு!




யாழ்ப்பாணத்தில் ஐக்கிய நாடுகள் அதிகாரி ஒருவரை இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக ஐ.நா. சபையின் அதிகாரி ஒருவரை மேற்கோளிட்டு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் “இராணுவத்தினர் எனக் கூறிக் கொண்ட இருவர், யாழ். மாவட்டத்தில் உள்ள ஐ.நா. அதிகாரி ஒருவரின் வதிவிடத்துக்குள் நுழைந்தனர். ஒருவர் கைத்துப்பாக்கியை வைத்திருந்தார். குறித்த ஐ.நா அதிகாரி தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதாக அவர்கள் தெரிவித்ததுடன், அந்த அதிகாரியை அவர்கள் அச்சுறுத்தியுள்ளனர்” என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது,

இருப்பினும் இந்த முறைப்பாடு தொடர்பாக வடக்கில் உள்ள இராணுவத்தினர் தெரிவிக்கையில், தமது படையினர் எவரும் இந்தச் சம்பவத்தில் தொடர்புபடவில்லை என தெரிவித்துள்ளனர்.

மேலும் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்ற நிலையில் இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# ஐ.நாவிடம் நீதி விசாரணை கோரி சர்வதேச விசாரணையை வலியுறுத்தி முல்லைத்தீவில் கையெழுத்துப் போராட்டம்.








தாயகத்திலே திட்டமிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஐ.நாவுக்கு மகஜர் அனுப்புவதற்கான மாபெரும் கையெழுத்து போராட்டத்தை வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆரம்பித்துள்ளார்கள்.

அந்தவகையில் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த போராட்டம் முன்னெடுக்க உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்ற கேள்வியை முன்னிறுத்தி தமக்கான நீதியை சர்வதேசத்திடம் கோரி, வடக்கு கிழக்கில் ஒருலட்சம் கையொப்பங்களைத் திரட்டி கோரிக்கை மனுவுடன் தற்போது ஆரம்பமாகியுள்ள ஐ.நாவின் 40 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்படுமென்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். அம்பாறையில் ஆரம்பித்த இந்த போராட்டம் யாழ்ப்பாணத்தில் நிறைவடையும் எனவும் அதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டும் எனவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டமும் எமது அரசியல் போராட்டமும்

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தொடர்ச்சியான போராட்டம் முன்னெடுக்கப்பட்டு 2 ஆண்டுகள் நிறைவடையப் போகின்றன. முள்ளிவாய்க்காலின் முன்பும் பின்பும் கைது செய்யப்பட்டும், உறவுகளால் ஒப்படைக்கப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளைத் தேடிய கண்ணீர்ப் போராட்டத்தை பத்து ஆண்டுகளுக்கு மேலாகவே எம்மவர்கள் நிகழ்த்தி வருகின்றார்கள். குறிப்பாக சர்வதேச நியமங்களுக்கு அமைய முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது ஆதாரங்களோடு ஒப்படைக்கப்பட்டவர்கள் விடயத்தில் கூட சிங்கள பௌத்த மேலாதிக்கம் எந்த விதமான அக்கறையும் கொள்வதாக இல்லை. சர்வதேசம் சம்பந்தமான எங்களது மக்களின் பார்வையும் ஒட்டு மொத்தமான நம்பிக்கை இழப்பை நோக்கியே போய்க் கொண்டிருக்கின்றது.

ஜெனிவா மனித உரிமைகள் 40வது கூட்டத் தொடர் ஆரம்பமாவுள்ள பெப்ரவரி 25ஆம் நாள் மாபெரும் போராட்டம் ஒன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் இடம்பெற இருக்கின்றது. இந்த மாபெரும் பேரணிக்கு ஆதரவாக தமிழகத்திலும் புலம் பெயர் நிலங்களிலும் போராட்டங்களை முன்னெடுக்குமாறு வடக்கு கிழக்கு இணைந்த காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் இணைப்பாளர் திருமதி கனகரஞ்சினி யோகராசா அவர்கள் அறைகூவல் விடுத்திருந்தார். எங்களுக்கு அநீதி இழைத்தவர்களின் உள்ளக விசாரணைகளிலும் அலுவலகங்களிலும் சிறிதும் நம்பிக்கையற்ற நிலையில் சர்வதேசத்திடம் நீதி கேட்டே தங்களது போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றார்கள்.

முள்ளிவாய்க்காலின் பின்னரான எங்களது உரிமைப் போராட்டத்தைக் கூட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டமே உயிர்ப்போடு வைத்திருக்கின்றது. சிங்கள பௌத்த மேலாதிக்கத்துக்கு எங்களது போராட்டம் சம்பந்தமாக எந்த அக்கறையும் இல்லை என்பதை விட எமது மக்களால் தேர்வு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இது சம்பந்தமான எந்த அக்கறையும் இல்லை என்பதும் கிடைக்கின்ற அரிய வாய்ப்புக்களைக் கூட அவர்கள் எங்களது மக்களின் உரிமைகளுக்காக பயன்படுத்துவது இல்லை என்பதும் கசப்பான உண்மையாகி சினம் கொள்ள வைக்கின்றது.

தங்களது நலன்களுக்காக எங்களது விடயங்களை கையில் எடுப்பதும், கைநெகிழ்வதுமாக சர்வதேசம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. உரியவர்கள் நாங்களே அக்கறையின்றி ஒன்று திரண்டு எங்கள் பலத்தை வெளிப்படுத்தாவிட்டால் நலனில் மையம் கொண்ட உலகத்திடம் அந்த அக்கறையை எவ்வாறு எதிர்பார்க்க முடியும். முள்ளிவாய்க்காலின் பத்தாண்டு நிறைவை விரைவாக எதிர் நோக்கும் நிலையில் எங்களுக்கிடையிலான குரோதங்களையும் சேறுபூசல்களையும் விட்டு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதிலும் இலக்கு நோக்கிய பயணத்திலும் கவனம் கொள்வோம். தாயகத்திலும் தமிழகத்திலும் புலம் பெயர் நிலங்களிலுமுள்ள அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்துக்கு ஆதரவான போராட்டங்களை முன்னெடுப்போம். முள்ளிவாய்க்காலின் அத்தனை உயிர்க் கொடைகளையும் நாம் உண்மையில் எம் நெஞ்சிருத்தினால் எங்களுக்கிடையிலான அத்தனை பேதங்களையும் கடந்து நாம் செயற்பாட்டில் ஒன்றுபட்டவர்களாக பத்தாண்டை நினைவு கொள்வோம். இருக்கின்ற குறுகிய காலத்தில் தமிழ்த் தேசியத்தில் உண்மையான பற்றுறுதி உள்ளவர்கள் சிந்திப்போம் செயற்படுவோம்.

# எமக்கான நீதி கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை.

தமிழர் தாயகத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் ஒன்றிணைந்து அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு கிழக்கு இணைந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குடும்பங்களின் சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளனர். இச்சங்கமானது காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்கவேண்டும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்பதை அறியவேண்டும் போன்ற பன்முக நோக்குடன் பல்வேறு அச்சுறுத்தல்கள் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சர்வதேச சனநாயக விழுமியங்களுக்கு உட்பட்டு அறவழியில் தொடர் போராட்டங்களை துணிச்சலுடன் முன்னெடுத்து வருகின்றது.

குறித்த அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 25 ஆம் திகதி கிளிநொச்சியில் மாபெரும் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் இச்சங்கத்தின் மாவட்ட இணைப்பாளர்கள் தமது நீதிக்கான இந்த பயணத்தில் தமது உறுதியான நிலைப்பாடுகள் குறித்து சில கருத்துக்களை இலக்கு மின்னிதழுடன் பகிர்ந்து கொண்டனர்.

## அரசின் நாடகத்துக்கு உடன்பட நாம் தயாரில்லை

### மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் திருமதி அமலநாயகி



காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளை மீட்பதற்காக எமது சக்திக்கும் மீறி அனைத்து இடத்திலும் தேடினோம் பலன் இல்லை. யுத்தம் முடிவுக்கு வந்து 10 வருடங்கள் ஆகியும் எமது கோரிக்கைக்கு இலங்கை அரசோ அல்லது சர்வதேச சமூகமோ எமக்கான பதிலை வழங்கவில்லை . மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 3000 க்கு மேற்பட்டவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளார்கள்.

சனாதிபதியை பலமுறை சந்தித்து எமது கோரிக்கையை முன்வைத்தோம். நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் பல வாக்குறுதிகளை அள்ளி வீசினார். இறுதியாக காணாமல் போனவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுவதாக தெரிவித்தார். இதுவரை வெளிவரவில்லை. காணாமல்ப்போனோர் அலுவலகத்தை கண்துடைப்புக்காக ஆரம்பித்துள்ளது. மக்களின் கருத்துக்கள் எதுவும் இவ்விடயம் தொடர்பாக உள்வாங்கப்படவில்லை. இந்த அலுவலகத்தின் மூலம் எமக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது. பெயர் பதிவு செய்ய மட்டுமே இந்த அலுவலகத்தை நிறுவியுள்ளார்கள் என்பதை சர்வதேசம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

பாதுகாப்பு இல்லாமல் வாழ்ந்து வருகிறோம். தொடர்ச்சியாக இராணுவத்தால் கண்காணிக்கப்படுகிறோம். அடுத்து எமக்கு என்ன நடக்கும் என தெரியாது. இளம் சமூகத்தினர் இவ் விடயத்தை கருத்தில் எடுக்கக்கூடாது என்பதற்காக அரசு பல்வேறு எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. நாளாந்தம் கண்ணீருடன் மன உளைச்சலில் போராடி வருகின்றோம். நாட்டு பிரசையை காப்பாற்றுவது அரசின் கடமை. ஆனால் காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு இழப்பீடு வழங்குகிறோம் என பேரம் பேசுவது எமக்கு துன்பத்தை தருகிறது. அரசின் இவ்வாறான நாடகத்துக்கு நாங்கள் உடன்படத் தயாரில்லை. எமக்கு எமது பிள்ளைகள் எங்கே? என்று பதில் தெரியும்வரை அறவழியிலான எமது போராட்டம் தொடரும்.

## எமது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் போராடி வருகிறோம்

### முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் திருமதி ஈஸ்வரி



எனது கணவர் 2009 ஆம் ஆண்டு இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்டார். இன்றுவரை அவரைத் தேடி அலைகின்றேன். என்னைப்போலவே காணாமலாக்கப்பட்டவர்களை இழந்துவாடும் அனைத்து உறவுகளும் எமது உறவுகளின் உரிமைக்காக ஒன்றுபட்டு நிற்கின்றோம் என்று வடக்கு கிழக்கு இணைந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குடும்பங்களின் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் திருமதி ஈஸ்வரி மரியசுரேஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

போராட்டத்தில் ஈடுபட்ட பலர் தமது பிள்ளைகள் கிடைப்பார்கள் என்ற ஏக்கத்துடனேயே இறந்துவிட்டார்கள். பலர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு பல இன்னல்களின் மத்தியில் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சொல்லமுடியாத துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

போராட்டத்தில் உள்ள எமக்கு (குறிப்பாக பெண்கள்) குடும்ப பிரச்சனை சமூக பிரச்சனை பாதுகாப்பு பிரச்சனை என பல்வேறு பிரச்சனைகள் உள்ளது. அதையும் சமாளித்து எமது குடும்பத்தை தனி ஒரு பெண்ணாக காப்பாற்றுவது மிக கடினம். கூலி வேலை செய்துதான் வாழ்வாதாரத்தை கொண்டு செல்கிறோம். எமது உறவுகள் கிடைத்தால் மட்டுமே நாங்கள் போராட்டத்தை நிறுத்துவோம். மழை, வெயில் என்று பாராமல் வீதியில் இறங்கி நாம் போராடிவருகின்றோம். எமக்கு ஆதரவாக ஒரு குறிப்பிட்ட தரப்பினரே போராட்டத்தில் பங்கெடுத்து வருகிறார்கள். வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து தரப்பினரும் குறிப்பாக பல்கலைக் கழக மாணவர்களும் சிவில் அமைப்புக்களும் அதிகளவில் எமது போராட்டங்களில் பங்கெடுத்து ஆதரவு தரவேண்டும்.

## உறவுகள் கிடைப்பார்கள் என்ற நம்பிக்கையில் அனைத்து துன்பங்களையும் தாங்குகிறோம்

### மன்னார் மாவட்ட இணைப்பாளர் திருமதி உதயசந்திரா



மன்னார் மாவட்டம் முப்படையின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசம். இராணுவத்தினர் எமது பிள்ளைகளை நேரடியாக பிடித்துச் சென்றார்கள். அதற்கு சாட்சியாக ஒவ்வொரு குடும்பத்தினரும் உள்ளார்கள். இங்கு பிள்ளைகளை தொலைத்தவர்களைவிட கணவர்களை தொலைத்தவர்கள்தான் அதிகம் உள்ளார்கள். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் எண்ணிலடங்காதவை. ஒவ்வொரு நாளும் நாம் சொல்லொணா துயரத்தை எதிர்நோக்கிக் கொண்டுள்ளோம். எமது உறவுகள் கிடைப்பார்கள் என்ற ஒரே ஒரு நம்பிக்கையில்த்தான் அனைத்து துன்பங்களையும் தாங்கிக்கொள்கிறோம். இதுவரை எமக்கான ஆறுதலை அரசோ அரசில்வாதிகளோ தரவில்லை.

இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்ற நிலை தற்போது தோன்றியுள்ளதாக அறிகின்றோம். இதுவரை எமக்கான நீதியை தராதவர்கள் இனியும் தரமாட்டார்கள். பாதிக்கப்பட்ட எம்மை கேட்காமல் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது. சர்வதேசம் ஒரு தீர்வைத்தரும் என எதிர்பார்த்திருந்த நிலையில் கால அவகாசம் வழங்கும் தகவலை அறிந்துள்ளோம். மீண்டும் நாம் ஏமாற்றப்படப் போகிறோமா? என்ற அச்சம் எமக்கு எழுந்துள்ளது. இனி யாரை நம்புவதென்று தெரியவில்லை என தெரிவித்தார்.

## எமக்கு நடந்த அநீதி மீண்டும் எமது இனத்துக்கு நடக்கக்கூடாது

### அம்பாறை மாவட்ட இணைப்பாளர் திருமதி செல்வராணி



வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களும் இணைந்து எமது உறவுகளைத் தேடி போராட்டத்தை மேற்கொள்கிறோம். எம் உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பது தெரிய வேண்டும் என்பது முக்கிய நோக்கம்.

எமது நாட்டில் உள்ள பயங்கரவாத தடுப்புச்சட்டம் மிகவும் பயங்கரமானது. அது காணாமல் போனவர்களின் உறவுகளான எம்மைத் தாக்குமா? என்ற அச்சம் எமக்கு ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியாக எம்மை அழிக்கும் செயற்பாட்டையே அரசு மேற்கொண்டு வருகிறது. இலங்கை அரசாலும் அரசியல்வாதிகளாலும் புறந்தள்ளப்பட்டு நடு வீதியில் போராடுகின்றோம். வீதியிலே எமது வாழ்க்கை முடியப்போகிறதா? என்ற கேள்வி தற்போது எம்முள் எழுந்துள்ளது. இறுதியாக சர்வதேசத்தை நம்புகிறோம் சர்வதேசம் எமக்கு உதவ வேண்டும். இன்று எமக்கு நடந்த அநீதி நாளை எமது இனத்துக்கு நடக்கக்கூடாது என்பது எமது நோக்கம். விரைவில் எமது பிரச்சனைக்கு முடிவு தெரிய வேண்டும். கூலி வேலை செய்துதான் நாம் எமது வாழ்க்கையைக் கொண்டு செல்கிறோம். அதற்கும் மேலாக எமது உறவுகள் எங்கு என்ற ஏக்கம் எதிர்பார்ப்புத்தான் அதிகமாக உள்ளது.

## விலை போனவர்களை நம்பாமல் நாம் தனித்து நின்று போராட வேண்டும்

### யாழ் மாவட்ட இணைப்பாளர் தம்பையா சிவராசா



காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் யாரும் எமக்கு உரிய தீர்வை தரமாட்டார்கள். அனைத்து தரப்பும் தமது சுய லாபத்துக்காக தான் எம்மை பயன்படுத்துகிறார்கள். எமது கோரிக்கைகளை அலட்சியம் செய்தும் தமது தவறுகளை நியாயப்படுத்துவதிலுமே குறியாக உள்ளார்கள்.

எமது பாராளுமன்ற பிரதிநிதிகளாக தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்புத் தான் உள்ளது. ஆனால் அவர்கள் தமது அற்ப சொற்ப ஆசைகளுக்காக எம்மை அடகுவைத்து விட்டார்கள். அரசை காப்பாற்றுவதில் மட்டுமே குறியாக உள்ளனர்.

அவர்களுடைய பிள்ளைகள் காணாமல் போகவில்லை கைது செய்யப்படவில்லை. அவர்களுக்கு எமது வேதனைகளை புரிந்து கொள்ள நேரமும் இல்லை. எமது வாக்குகளை பெற்று அரசை காப்பாற்றும் வேலையை செய்து வருகின்றார்கள்.

பதவி ஆசைபிடித்து அலையும் அவர்களுக்கு எமது கோரிக்கை பெரிதாக தெரியாது, மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். சர்வதேசம் பிராந்திய நலன் கருதி தனது செயற் பாடுகளை மேற்கொண்டு வருகிறது சிங்கள அரசு ஒற்றை ஆட்சியின் கீழ் எம்மை கொண்டு வந்து நசுக்குவதற்கு ஏற்ப திட்டங்களை உருவாக்கிவிட்டது. அதற்கு எமது பிரதிநிதிகள் விலை போய்விட்டார்கள். அந்த அரைவேக்காடு அரசியல்வாதிகளை மீண்டும் நம்பாமல் நாம் தனித்து நின்று போராட வேண்டும். நாம் ஒற்றுமையாக போராடும் போதுதான் எமக்கான நீதியை நாம் பெற முடியும் என்றார்.

## காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்.

### திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் திருமதி சரோஜாதேவி செல்வராசா



நாம் இராணுவத்திடம் கையளித்த எமது உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? உயிருடன் இருக்கிறார்களா இல்லையா? என்ற கேள்விகளுக்கு எமக்கு பதில் கிடைத்தே ஆக வேண்டும். எமக்கு ஆதரவாக இந்த கேள்விகளை கேட்பதற்கு யாரும் எம்முடன் இல்லை.

நாம் தொடர்ந்து வீதிகளில் இருந்து போராடிவருகிறோம். எம்மை இழிந்து பேசுவதோடு எமது கோரிக்கைகளை அலட்சியம் செய்வதிலும் காலத்தை இழுத்தடிப்பதிலும் இலங்கை அரசு கவனம் செலுத்திவருகிறது. அதேபோன்று எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் ஒருதுளியும் அக்கறை இல்லை. எமது காணாமலாக்கப்பட்டோர் பிரச்சனையை போலவே அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட எத்தனையே பிரச்சனைகளை தமிழ் மக்களின் கழுத்தை நெரித்துக்கொண்டு உள்ளது. ஏதாவது ஒரு பிரச்சனையை தீர்க்கவேண்டும் என்பதற்காக கோரிக்கையை முன்வைத்து நாடாளுமன்றத்தில் ஒரு நாளாவது வெளிநடப்பு செய்திருப்பார்களா?

எமது பிள்ளைகளை நேரடியாக இலங்கை இராணுவத்திடம் கையளித்தோம். சாட்சிகளாக நாங்கள் உள்ளோம். அந்த நிலையில் 10 வருடங்கள் கழிந்தும் எமக்கு பதில் கிடைக்கவில்லை. நாம் எமது கண்ணை கட்டி காட்டில் விட்டது போன்று வாழ்ந்து வருகிறோம்.

பிள்ளைகள் தொடர்பில் எந்த தகவலும் தெரியாமல் பலர் இறந்து போய்விட்டார்கள். நாமும் எமது உறவுகள் தொடர்பாக எந்த தகவலும் தெரியாமல் காணாமல் போய்விடுவோமோ? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்ற பதில் தெரிந்தால் நிம்மதியாக செத்துப்போய்விடுவோம்.

## ஒற்றுமையான போராட்டத்தின் மூலம் சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

### கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் திருமதி கனகரஞ்சினி யோகராசா



இலங்கை அரசினுடைய மனிதாபிமானமற்ற ஆட்சி முறையில் நாம் வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். 10 வருடங்களாக எமது போராட்ட வாழ்க்கை வீதியில் தொடர்கிறது.

நாட்டில் நல்லாட்சி என தெரிவித்து ஆட்சிக்கு வந்த சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முழுமையாக நம்பினோம். எமது கோரிக்கைகளை பல தடவைகள் அவரிடம் முன்வைத்தோம். ஆனால் அவர் எமக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

இலங்கை அரசுக்கு 2 வருட கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அந்த காலப்பகுதியில் கண்துடைப்புக்காக பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டது. அரசால் பல வாக்குறுதிகள் எமக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் எவையும் எமக்கு தீர்வு தரும் வகையில் அமையவில்லை. மீண்டும் அதே நாடகம் அரங்கேற்றுவதற்கு கால அவகாசம் வழங்கப்படப் போவதாக தெரிய வருகிறது. அதற்கு எமது மக்கள் பிரதிநிதிகளும் சம்மதம் தெரிவிக்கும் நிலையில் உள்ளார்கள். அது எமக்கு வேதனை அளிக்கிறது.

இலங்கையில் சிங்கள அரசு எது ஆட்சிக்கு வந்தாலும் எமக்கான நீதியை பெற்றுத்தரமாட்டார்கள் என்பதை நாம் ஆணித்தரமாக நம்புகிறோம். எனவே சர்வதேசமே எமது பிரச்சனைகளுக்கு தீர்வை தர வேண்டும். அதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினராகிய நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

ஐநா கூட்டத்தொடரில் எமக்கான நீதி வழங்கப்படவேண்டும். அதற்கு அனைத்து தமிழ் உறவுகளும் ஒற்றுமையாக இணைந்து எமது கோரிக்கையை முன்னிறுத்த வேண்டும். 25 ஆம் திகதி கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் பாரிய பேரணி மற்றும் புலம்பெயர் தேசத்தில் முன்னெடுக்கப்படும் கவனயீர்ப்புக்கள் மூலம் சர்வதேசத்தின் கவனத்தை எம்பக்கம் கொண்டுவந்து எமக்கான நீதியை பெறுவதற்கு போராட வேண்டும்.

## கால அவகாசம் வெறும் கண்துடைப்பே. சர்வதேசம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

### வவுனியா மாவட்ட இணைப்பாளர் திருமதி சரோஜா சண்முகம்பிள்ளை



எமது பிள்ளைகளை தொலைத்து 10 வருடங்கள் கடந்தும் இன்றுவரை தீர்வில்லை. இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது. கண் துடைப்புக்காக காணாமல் போனோர் அலுவலகத்தை இலங்கை அரசு ஆரம்பித்தது. இதைப்போலவே கடந்தகாலங்களில் பல ஆணைக்குழுக்களை அமைத்து எம்மை ஏமாற்றினார்கள். எமது பிள்ளைகளை காணாமல் ஆக்கியது போன்று எம்மை காணாமல் போக செய்வதற்காக மிகுதியாக உள்ள எம்மை எமது குடும்பங்களின் விபரங்களையும் பதிவு செய்தார்கள் என எண்ணத்தோன்றுகிறது. ஏனெனில் கால அவகாசம் கொடுத்ததற்கு ஏற்றவாறு எந்த நன்மையும் தீர்வும் எமக்கு வழங்கப்படவில்லை.

எமது பிள்ளைகள் உயிருடன் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் போராடுகிறோம். சர்வதேசம் இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் வழங்கக்கூடாது. எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரிய வேண்டும். என்பதுடன் எமக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்றால் உடனடியாக சர்வதேசம் தலையிட்டு எமக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும்.

# தலைமை ஏற்கும் பிரித்தானியா தமிழருக்கு சாதகமா?

சுடரவன்

ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் நெருங்கிவரும் இவ்வேளையில், பேரவையின் மனித உரிமைகள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் மையக்குழுவிற்கு, பிரித்தானியா தலைமையேற்க இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஐ.நாவிற்கான பிரித்தானியாவின் நிரந்தர பிரதிநிதி ஜூலியன்பிரெய்த்வேய்த் இதனை உறுதி செய்துள்ளார். இக்குழு கனடா, ஜெர்மனி, மசடோனியா, மொண்டெனேகுரோ ஆகிய நாடுகளை உள்ளடக்கியதாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.



நான்கு நாடுகள் தொடர்பான மூன்று தீர்மானங்களும், ஒரு கூட்டறிக்கையும் இந்த மையக்குழுவால் பேரவையில் சமர்ப்பிக்கப் படவிருப்பதாகவும் குறித்த தீர்மானங்கள் சிறிலங்கா, சிரியா, தென்சூடான் என்பவற்றை உள்ளடக்கியிருப்பதாகவும் அறியமுடிகிறது.

முதன்முதலாக 2015இல் அமெரிக்காவால் சிறிலங்கா தொடர்பான தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்ற பட்டது. அவை தொடர்பான எந்தவொரு முன்னேற்றமும் எட்டப்படாத நிலையில் இன்று பிரித்தானியா தலைமையில் தீர்மானம் கொண்டுவரப்படவிருக்கிறது.

மையக்குழுவின் தலைமையை பிரித்தானியா ஏற்றிருப்பது தொடர்பில், தமிழர்கள் தரப்பில் எதிர்பார்ப்புகள் சற்று மேலோங்கி இருப்பதுபோல் தெரிகிறது. கனடா இதில் அங்கம் வகிப்பதை மேலதிக அனுகூலமாக தமிழர்கள் பலர் நோக்குகிறார்கள்.

பிரித்தானியாவில் பெருமளவான தமிழர்கள் வாழ்கிறார்கள். தம் தாயகம் தொடர்பான கரிசனையை அவர்கள் எப்போதும் வெளிப்படுத்தியே வந்துள்ளனர். இந்தவகையில் பிரித்தானிய தமிழரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயலாற்றும் என தமிழர்கள் நம்புகின்றனர். பிரித்தானிய அரசியல்வாதிகளுடனான தொடர்புகள், தமிழர் தரப்பினரிடம் பிரித்தானிய அரசியல்வாதிகள் வழங்கிவரும் வாக்குறுதிகள் என்பனவும் மேலும் இந்த எதிர்பார்ப்பை வலுப்படுத்தும் காரணிகளாக அமைகின்றன.

மேலும் காலனித்துவ காலம் தொட்டு தமிழர்களுக்கு தான் இழைத்து வந்த பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் தேடிக்கொள்ளும் ஒரு நல்ல வாய்ப்பாக இந்த சந்தர்ப்பத்தை பிரித்தானியா பயன்படுத்திக்கொள்ளும் என்ற நம்பிக்கையும் ஓரளவில் தமிழர்கள் மத்தியில் உள்ளதென்றே கூறவேண்டும். எது எப்படியிருந்தாலும் பிரித்தானியா எங்களை ஆண்ட நாடு. அது எமக்கு நிச்சயம் உதவும் எனப்பேசும் காலனிக்காலத்து உறவின் நினைவுகளில் இன்னும் திளைத்திருக்கின்ற தமிழர்களையும் நாம் காணமுடிகிறது.

இவ்வாறு பிரித்தானியா தொடர்பில், தமிழர் தரப்பில் ஒருசாரார் தமது நம்பிக்கைகளை வெளிப்படுத்தினாலும் இன்னொரு தரப்பிலிருந்து அவநம்பிக்கைக் குரல்கள் எழுவதையும் எம்மால் கேட்கமுடிகிறது. அதற்கான காரணங்களும் வலுவானதாகவே காட்டப்படுகின்றன.

காலனித்துவ காலத்தை புறந்தள்ளினாலும், பின்வந்த காலங்களிலும் கூட பிரித்தானியா எப்போதும் சிறிலங்கா அரசதரப்புக்கு ஆதரவாகவும், தமிழருக்கு எதிராகவும் இருந்து வந்துள்ளது என அவர்கள் அடித்துக் கூறுகின்றனர்.

குறிப்பாக இனவழிப்பு செயற்பாடுகளில் பிரித்தானியாவின் பங்கு குறித்து பேசப்படும் விடயங்கள் மிகப் பாரதூரமானவை. இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு கூட இதுவரை அவ்வரசு பதிலளிக்காதது மட்டுமன்றி, சிறிலங்காவுடனான இரகசிய செயற்பாட்டு ஆவணங்களை




எரித்தமை சந்தேகங்களை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

மேலும் பிரித்தானிய இராசதந்திர வட்டாரங்களிலிருந்து கசிந்துள்ள தகவல்களின்படி இம்முறையும் சிறிலங்காவுக்கு தீர்மானங்களை நிறைவேற்றுவதில் அவகாசம் வழங்கப்படுமென அறியமுடிகிறது. இந்த நடவடிக்கையானது தமிழர்களின் எதிர்பார்ப்புகளை முற்றாக்கப் புறந்தள்ளும் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது.

பிரித்தானியா தான் விரும்பினாலும்கூட சிறிலங்கா மீது அழுத்தத்தை பிரயோகிக்கும் நிலையில் இல்லை எனவும் கூறப்படுகிறது. அழுத்தம் பிரயோகிக்கப்படுமானால் இனப்படுகொலை தொடர்பில் பிரித்தானியாவின் செயற்பாடுகளை இலங்கை கசியவிடும் வாய்ப்பு உள்ளதாக அரசியல் அவதானிகள் சிலர் கருதுகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் பிரித்தானிய அரசியல்வாதிகள் பலர் சிறிலங்கா அரசுக்கு சார்பாக ஒருதலைப்பட்சமாக பேசிவருவதும் பிரித்தானியாவின் போக்குபற்றிய கவலைகளை அதிகரிப்பதாக உள்ளன. " சிறிலங்காவை போர்க்குற்றச்சாட்டில் இருந்து பிரித்தானியா பாதுகாக்க வேண்டும். சிறிலங்கா அரசு ஐ.நாவின் தீர்மானங்களை பெரியளவில் நிறைவு செய்துள்ளது. சிறிலங்காவில் இறுதிக்கட்டப் போரில் 40,000 மக்கள் கொல்லப்பட்டனர் என்பது தவறான குற்றச்சாட்டாகும். பிரித்தானியப் படைகளின் தகவல்களின்படி 6000 பேரே மரணமடைந்தனர். காணாமல்போனோர் என்று கூறப்படுபவர்கள் வெளிநாடுகளில் மறைந்து வாழ்கின்றனர்" என பிரித்தானிய ஆளும் பழமைவாதக் கட்சியைச் சார்ந்த Baron Naseby உரையாற்றியது நாமறிந்ததே.

இவ்வாறு பிரித்தானியாவின் தலைமை வகிபாகம் தொடர்பில் நம்பிக்கைகளும், அவநம்பிக்கைகளும் நிலவும் இவ்வேளையில் தமிழர்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமையப் போகின்றன? என்ற கேள்வி இயல்பாக எழுகிறது. மனிதவுரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் தீர்மானங்கள் பெரும்பாலும் இவ்வேளையில் நிறைவு செய்யப்பட்டிருக்கும் என்றே நம்பலாம். அவற்றில் இனி மாற்றங்கள் இடம் பெறவாய்ப்புகள் மிகக்குறைவே. மேலும் குறித்த தீர்மானங்களில் இலங்கைக்கு

தொடர்ச்சி 11 ஆம் பக்கம் →

# எமக்கான பாடம் எமது எதிரியிடமே உள்ளது அதனை முதலில் கண்டறிவோமாக

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**

எதிர்வரும் மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் 40 ஆவது கூட்டத்தொடரில் சிறீலங்கா தொடர்பான விடயங்களை தனது கையில் எடுத்துள்ளது பிரித்தானியா அரசு. அதனால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை? ஏமாற்றமும் மீண்டும் ஒரு துரோகமும் தான் தமிழ் மக்களுக்கு மிஞ்சப்போகின்றது.



தமிழ் இராய்ச்சியத்தை சிங்களவர்களின் கைகளில் கொடுத்துச் சென்ற பிரித்தானியர்களால் கடந்த 71 வருடங்களாக தமிழ் மக்கள் சந்தித்த இழப்புக்கள் மற்றும் சிந்திய குருதிகள் மிக அதிகம். ஆனால் மீண்டும் தமது பிராந்திய நலன்களை முன்னிறுத்தி எம்மைப் பயன்படுத்தி நன்மைகளைப் பெற்றிட முனைந்து நிற்கின்றது பிரித்தானியா.

அதாவது எதிர்வரும் ஜெனீவாக் கூட்டத்தொடரில் சிறீலங்கா அரசுக்கு மேலதிக கால அவகாசத்தை வழங்கி தமிழ் மக்களின் ஒட்டுமொத்த இன அழிவுக்கான வழியைக் காண்பிக்கப்போகின்றது பிரித்தானிய அரசு. தமிழ் மக்களின் சொந்த இடமான திருமலைத்துறைமுகத்தை அமெரிக்க கடற்படைக்கு சிறீலங்கா அரசு வழங்கியதற்கான பிரதி உபகாரமே இதுவாகும்.

பிரித்தானியாவைத் தலைமையாகக் கொண்ட ஐந்து நாடுகள் கொண்ட குழுவில் கனடா, ஜெர்மனி, மசடோனியா மற்றும் மொன்ரோநிக்ரோ போன்ற நாடுகள் அங்கம் வகிக்கின்றன. சிறீலங்காவைக் காப்பாற்றி அதற்கு கால அவகாசத்தை வாங்கி கொடுக்க கூட்டணி அமைத்துள்ள இந்த நாடுகளை பார்க்கும்போது எமக்கு ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. அதாவது புலம்பெயர் சமூகம் தனது போரிடும் வலுவை முற்றாக இழந்துவிட்டது அல்லது புலம்பெயர் தமிழ் மக்களின் போரிடும் வலு சிறீலங்கா அரசினால் முற்றாக முடக்கப்பட்டுள்ளது என்பதே அதன் பொருள்.

ஈழத்தில் போர் இடம்பெற்றபோது அதனை உயிர்ப்புடன் வைத்திருந்து மிகப்பெரும் வீச்சுடன் செயற்பட்ட புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தற்போது போராட்டத்தை உயிர்ப்புடன் வைத்துள்ள போதும் அதன் வீரியம் குறைந்துவிட்டது என்பதையே இது காட்டுகின்றது.

ஏனெனில் கனடா, பிரித்தானியா, ஜெர்மனி போன்ற நாடுகளில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அதிகம் உள்ளதுடன், அந்த நாடுகளின் உள்ளக அரசியலிலும் மெல்ல மெல்ல ஆதிக்கம் செலுத்தும் தகமையையும் தமிழ் மக்கள் கொண்டுள்ளனர். அது மட்டுமல்லாது அதிக மக்களை ஒருங்கிணைத்து அந்த நாடுகளில் போரிடும் வலுவும் அவர்களிடம் உண்டு.

கூட்டணியில் உள்ள ஏனைய நாடுகளைப் பார்த்தால் மொன்ரேநீக்ரோ தமிழ் மக்களைப்போலவே இன அழிவைச் சந்தித்து, அண்மையில் விடுதலையடைந்த தேசம், ஆனால் அது தற்போது இனஅழிப்பு அரசுக்கு கால அவகாசம் வழங்குவதற்கு அனுசரணை வழங்குகின்றது என்றால் புலம்பெயர் தேசத்தின் போராட்டத்தில் நாம் தோற்றுவிட்டோம் என்பது தான் பொருள்.

அதாவது நாம் கூட்டமாகவும், குடும்பமாகவும் சென்று பிரித்தானிய நாடாளுமன்றத்திலும், கனடா நாடாளுமன்றத்திலும் தைப்பொங்கலுக்கு பொங்கிச் சாப்பிட்டுவிட்டு வந்தோமே தவிர அவர்களிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் தொடர்பில் பேசவில்லை என்பதுதான் பிரித்தானியா மற்றும் கனடா அரசுகளின் தற்போதைய நடவடிக்கைக்கான ஒரு வரி விளக்கம்.

அது மட்டுமல்லாது எமது அரசியல் என்பது மேற்குலகத்துடன் மட்டுமே நின்றுவிட்டது. நாம் ரஷ்யாவையோ அல்லது சீனாவையோ எமது அணியில் இணைக்கவில்லை, சிறீலங்கா அரசின் அணியில் சீனா, இந்தியா, மேற்குலகம், ரஷ்யா எல்லாம் உண்டு. எனவே சிறீலங்கா அரசுக்கு உதவுவதில் அவர்களுக்குள் போட்டியுண்டு.

ஆனால் நாம் மேற்குலகத்தில் மட்டுமே தங்கி நிற்பதனால், எங்களால் மேற்குலகத்திற்கு எந்த அழுத்தமும் ஏற்படப்போவில்லை, ஏனெனில் அவர்களுக்கு எதிரானவர்கள் எமது அணியில் இல்லை. எனவே மேற்குலகம் எங்களைக் கண்டுகொள்ளப்போவதில்லை. எதிரிகள் அற்ற தளத்தை நோக்கி யாரும் தமது



கவனத்தை குவிப்பதில்லை.

அதாவது நாம் அகதிகளாக வந்து குடியேறிய நாடுகளை மட்டுமே அனைத்துலகம் என எண்ணி வாழ்கின்றோம் என எண்ணத் தோன்றுகின்றது.

நாம் போராட வேண்டிய திசையை சுட்டிக்காண்பிப்பதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட புலம்பெயர் அமைப்பு ஒன்று எம்மிடம் இல்லை என்பதே தற்போதைய தோல்வி நிலைக்கான காரணம். அதாவது கூட்டு முயற்சியில் நாம் பின்தங்கியுள்ளோம்.

தாயகத்தைப் பொறுத்தவரையில் தற்போது உள்ள அரசை பதவியில் தக்கவைப்பதற்கு இரவு பகலாக உழைத்து கொழும்பில் உள்ள



உயர்நீதிமன்றங்களில் வழக்குகளைச் சந்தித்து வெற்றி கண்டவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

ஆனால் தற்போது அந்த அமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான

தொடர்ச்சி 10 ஆம் பக்கம் →

# ஐ.நாவின் மனித உரிமை சாசனத்திற்கு அமைவாகவே பல்கலைக் கழகத்தில் நினைவுத்தூபி அமைத்துள்ளோம்.

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.பி.எஸ்.பபிலராஜ்



இலங்கைத் தீவில் இடம்பெற்ற 30 ஆண்டுகால நீண்ட நெடிய யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஈழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் 2009 மே 18இல் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களை தோல்வியடைந்த தரப்பாகக் கருதி அவர்களுடைய நினைவுகூர்வதற்கான உரிமை முற்றாக மறுக்கப்பட்டிருந்த அதேநேரம் பேரினவாத ஆட்சியாளர்கள் தம்மை வெற்றி பெற்ற தரப்பாக கருதி யுத்த வெற்றியின் நினைவுச் சின்னங்கள் அமைத்தும், வருடாந்தம் மே 18இல் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

2015 இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தை தொடர்ந்து யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களின் வீரியம் குறைந்துள்ள போதும் தமிழ் மக்கள் உயிர் நீத்த தமது உறவுகளினை சுதந்திரமாக நினைவுகூர் வதற்கான உரிமையினை இதுவரையில் முழுமையாக அனுமதிக்கவில்லை. மாறாக நினைவேந்தல்களை மக்கள் மேற்கொள்வதை தடுக்கும் வகையில் அடக்குமுறைகளும் அச்சுறுத்தல்களும் மேற்கொள்ளப்படுகின்றது.

போரில் உயிர் நீத்த இராணுவத்தினரை நினைவு கூர்வதற்காக எமது மண்ணில் பல நினைவுத் தூபிகள் அமைக்கவும் நினைவுகூரவும் முடியும் எனில் ஈழத் தமிழர்களாகிய நாம் உயிர் நீத்த எமது உறவுகளிற்கு நினைவுத்தூபி அமைத்து ஏன் நினைவுகூர முடியாது. என்பதனை ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். உண்மையிலே இன நல்லிணக்க முயற்சியில் ஆட்சியாளர்கள் இதயசுத்தியுடன் ஈடுபட விரும்பினால் போரில் உயிர்நீத்த உறவுகளிற்கு நினைவுத்தூபி அமைத்து நினைவுகூர்வதற்கான உரிமையினையும் நினைவேந்தல் நடவடிக்கைகளையும் தடுக்கக்கூடாது.

ஒவ்வொரு குடிமக்களும் உயிர்நீத்த தமது உறவுகளினை நினைவுகூர்வதற்கான உரிமையினையும் உரித்தினையும் உடையவர்கள். இதனை ஐ.நாவின் மனித உரிமை சாசனம் வலியுறுத்துவதோடு இலங்கையின் அரசியலமைப்பு சட்டமும் அதன் சட்ட விதிகளின் பிரகாரம் ஏற்றுக்கொள்கின்றது. அதன் பிரகாரமே இறுதிப் போரில் உயிர்நீத்த அப்பாவி பொதுமக்களினை நினைவுகூரும் பொருட்டு முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியினை அமைக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு எமக்கு உள்ளது என்பதனை மாணவர் சமுதாயமாகிய நாம் உணர்ந்து கொண்டோம். இறுதிப் போரிலே தாய், தந்தை, சகோதரர்கள் மற்றும் உறவினர்களை இழந்த பலரும் எமது பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தமது உறவுகளினை நினைவுகூர்ந்து கண்ணீர் சிந்துவதற்கு அவர்களிற்குள்ள உரிமையினை மதித்தே பல்கலைக்கழக வளாகத்தினுள் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியினை அமைக்கும் பணியினை மாணவர் சமூகம் முன்னெடுத்துள்ளது.

போர் மௌனிக்கப்பட்டு 10 ஆண்டுகள் பூர்த்தியாகின்ற போதும் முள்ளிவாய்க்காலில் இடம் பெற்றது இனப் படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டு இதுவரையில் எமக்கான சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறை ஏற்படுத்தப்படாத நிலையிலும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் சாட்சியாக நினைவுத்தூபி ஒன்று நிறுவப்பட வேண்டியது அவசியம் என்பதனை உணர்ந்து கொண்ட போதும் நினைவுத்தூபி அமைப்பதற்கு இன்று வரையிலும் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கைத்தீவில் யுத்த வெற்றிச் சின்னங்களை அமைக்க வேண்டியதன் நோக்கம் என்ன? யுத்த வெற்றி விழா கொண்டாட வேண்டியதன் அவசியம் என்ன? பிறிதொரு நாட்டை வெற்றி கொள்ளும் போது அல்லது பிறிதொரு நாட்டவரிடம் இழந்த தமது பிராந்தியங்களை மீள வெற்றி கொள்ளும் போதே போர் வெற்றி நினைவுச்சின்னங்கள் அமைக்க வேண்டிய தேவையும் வெற்றி விழா கொண்டாட வேண்டிய அவசியமும் எழும். மாறாக ஒரே நாட்டிற்குள் வாழ்ந்து கொண்டு இழந்த எமது உரிமைகளை வென்றெடுக்கும் நோக்குடன் விடுதலைப் போரில் ஈடுபட்ட தரப்பினரை தோற்கடித்துவிட்டு அதற்கு யுத்த வெற்றி நினைவுச்சின்னங்களையும் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களையும் முன்னெடுப்பது யுத்த தர்மமாகாது.



இத்தகைய சூழலில் யுத்த வெற்றி நினைவுச்சின்னங்களும், யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களும் எதனைப் பிரதிபலிக்கிறது என்றால் சிங்கள தேசத்திடம் தமிழர் தேசம் தோல்வியடைந்துள்ளது. எனவே ஆட்சியாளர்கள்(சிங்கள தேசம்) தாம் நினைத்ததை செய்ய முடியும். தமிழ் மக்கள் தமது அடிமைகள் என்கிற நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

தமிழ் மக்களினை இலங்கைத் தீவில் அடிமையாக நடாத்துவதன் வெளிப்பாடே நாம் சுதந்திரமாக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்க முடியாமல் உள்ளமை. இது மட்டுமல்ல போர் மௌனிக்கப்பட்டு பத்தாண்டுகள் ஆகின்ற போதும் இறுதிப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான போர்க் குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றிற்கு நீதி வழங்கப்படாமல் உள்ளமை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் தாம்(சிங்கள தேசம்) தருவதையே தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் இத்தகைய அடிமைத்தனத்தின் வெளிப்பாடுகளே ஆகும். ஆட்சியாளர்களின் இவ்வாறான தவறான அணுகுமுறைகள் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை மேலும் தீவிரப்படுத்தும். என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

# நாட்டுப்பற்றாளர் (ஊடகவியலாளர்) சத்தியமூர்த்தியின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு



இறுதி யுத்தத்தின் போது ஊடகப்பணியில் உயிரிழந்த ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் பு.சத்தியமூர்த்தியின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் யாழ். நீதிமன்ற வளாகத்திற்கு அருகிலுள்ள திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவு தூபியில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்றது. அதனை தொடர்ந்து 3.30 இற்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் சத்தியமூர்த்தியின் "நினைவுகளுடன் பேசுதல்" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. யாழ்.ஊடக அமையம் மற்றும் எழுகலை இலக்கிய பேரவை என்பவை இணைந்து முன்னெடுத்த இந்நிகழ்வில் ஊடக செயற்பாட்டாளர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மறைந்த ஊடகவியலாளர் சத்திய மூர்த்தியின் நண்பர்கள் நினைவுரைகளை ஆற்றினார்கள். இறுதி யுத்த காலத்தில் அர்ப்பணிப்புடனான



ஊடகப்பணியில் பங்கெடுத்திருந்த பு.சத்தியமூர்த்தி இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் உயிரிழந்திருந்தார். அவரது உன்னதமான ஊடகப்பணியினை கௌரவித்து விடுதலைப்புலிகளின் தலைமை அவருக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## போர்க்குற்றத்தை சர்வதேசப் பொறிமுறையின் கீழ் விசாரிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டால் போராளிகளின் சார்பில் எந்தவொரு மன்றையும் எதிர்கொள்ளத்தயார்

**சனநாயக போராளிகள் கட்சியின் ஊடகபேச்சாளர் துளசி கருத்து.**



தொடர்ந்தும் இன்னல்களுக்குள் வாழ்ந்து வரும் ஓர்தேசிய இனத்தின் ஆன்மாவை சிதைக்கின்ற கருத்துக்களைக் கூறி மிலேச்சத்தனமான அரசியற் பகடையாட்டத்தை காலம் காலமாக சிங்கள ஆட்சியாளர்கள் ஆடி வந்திருக்கிறார்கள்.

'யாழ் மக்கள் எதைப்பற்றி சிந்திக்கிறார்கள் என்பதைப் பற்றி அலட்டிக்கொள்ளும் நிலையில் நாம் இல்லை" என்று 80 களில் ஜெயவர்த்தனா கூறியது போன்றே பிரதமர் ரணில் கிளிநொச்சியில் கூறியுள்ளார். அவர் ஜெனிவாவில் இலங்கைக்கெதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தையும் நீர்த்துப்போகச் செய்வதற்கான இராஜதந்திர மதிநுட்பத்தையும் பிரயோகிக்க முற்படுகின்றார். தமிழர் தாயகத்தின் அவலங்களையெல்லாம் கிடப்பில் போட்டுவிட்டு போர்க்குற்றங்கள் தொடர்பாக மன்னித்தல் மற்றும் மறத்தல் என்ற புதிய வியாக்கியானம் ஒன்றை கூறியுள்ளார்.

அரசு தமிழர்களுக்கு எதிராய் இழைத்த கொடுமைகளையிட்டு ஒப்புக்காகவேனும் இன்னும் மன்னிப்புக்கோரவில்லை என்பதை நினைவூட்ட விரும்புகின்றோம்.

இலட்சக்கணக்கான மக்கள் சாவின் விளிம்பில் நின்று

தொடர்ச்சி 10 ஆம் பக்கம் →

## உலகில் தற்கொலைகள் அதிகம் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் காணப்படுகின்றது



உலகில் தற்கொலை அதிகம் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாமிடத்தில் உள்ளது என சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் உளவளத்துறை ஆலோசகர் ஏ. மனூஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு பின்னர் வாழ்வின் அடுத்த கட்டம் என்ன? மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு கற்றல் வழிமுறைகளும், பன்முக ஆளுமைகளும் எனும் தலைப்பில் இலவச உளவியல் கருத்தரங்கு மெட்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் வழிகாட்டலில் மெட்றோபொலிடன் கல்லூரியின் ஏற்பாட்டில் கடந்த (15) சனிக்கிழமை நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்,

ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாக எமது நாடு காணப்படுகின்றது. இயற்கை எழில் கொண்ட நாடாகவும் உல்லாசப் பயணிகள் விரும்பும் நாடாகவும் இலங்கை காணப்பட்டாலும் உலகில் தற்கொலைகள் அதிகமாக இடம்பெறுகின்ற 10 நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது நாடாக காணப்படுவது கவலையான விடயமாகும்.

எமது நாட்டில் தற்கொலைகள் அதிகம் இடம்பெறுகின்ற மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் நுண்கடன் சுமைக்குள் சிக்குண்டு அதனை திருப்பிச் செலுத்துவதில் ஏற்படும் சிக்கல்களினால் கௌரவத்துக்கு பயந்து தற்கொலை நடவடிக்கைக்கு செல்கின்றனர். இதனை அரசாங்கம் கவனத்தில் எடுத்து அங்குள்ள நுண்கடன் நிறுவனங்களுக்கு தடைகளை விதித்துள்ளதை நாம் அறிவோம்.

2ஆம் பக்க தொடர்ச்சி →

## தமிழர்களுக்கு சலுகைகளை தந்து உரிமைகளை பறிக்க நினைக்கிறார் ரணில். விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

என்று கூறிச் சென்றுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனமாகத் தலையசைத்ததைப் பார்த்தால் அதற்கு அவர்கள் தயாராகி விட்டது போலவே தெரிகிறது. இந்த விதமான நடவடிக்கைகள் எங்களை எங்கே கொண்டு செல்லப் போகின்றன? பத்து வருடங்களில் வடகிழக்கு, சிங்கள பௌத்தப் பிரதேசமாக மாறும். மன்னிப்பின் மகத்துவம் இதுதான்.

உண்மையைக் கண்டறியவிடாமல் பிரதம மந்திரி தடுப்பது எமது உரிமைகளை மறுப்பதற்காக. எமக்குள்ள உரித்துக்களை மறைப்பதற்காக. உலக நாடுகளின் பார்வை உண்மையைக் கண்டறிந்து விடும் என்ற பயத்தினால். இதற்குத் துணைபோகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் துணிந்து விட்டார்கள். இதுகாறும் எம் மக்கள் பட்ட பாட்டை மறந்து, ஆயுதமேந்த வேண்டிய காரணத்தை மறந்து, உயிர்த் தியாகங்கள் செய்ததை மறந்து, பிச்சைப் பாத்திரம் ஏந்தி பிச்சை எடுத்து எம்மக்களுக்குப் பிச்சைபோட முன்வந்துள்ளார்கள்.

இதனை மக்களுக்குத் தெரியப்படுத்த இளைஞர் யுவதிகளான நீங்கள் முன்வர வேண்டும். உண்மையைக் கண்டறிவதில் நாம் திடமாக நிற்க வேண்டும்.

எம்மவர் குற்றங்களும் வெளிவந்துவிடும் என்று மிரட்டுகிறார். குற்றம் செய்யாத பலரை சிறைகளில் அடைத்து வைத்து சித்திரவதை செய்தீர்கள். எம்மைக் கொன்று குவித்தவர்களை, சித்திரவதை செய்தவர்களை இதுவரை அடையாளப்படுத்தாது அவர்களுக்கு மன்னிப்பை வேண்டி நிற்கின்றீர்கள். அவ்வாறு செய்தவர்கள் யார் என்பதை முறையாக, சர்வதேச விசாரணை மூலமாக முதலில் கண்டறியுங்கள். அதன் பின் மன்னிப்புப் பற்றிக் கதைக்கலாம் என்று பிரதமரிடம் கூற எங்களுள் எவரும் இல்லை. ஆகவே நாங்கள் அரசிடம் கூறுகின்றோம் சர்வதேச உதவியுடன் போர்க் குற்ற விசாரணை நடத்துங்கள். நடந்தவை இனப்படுகொலையா என்பதை முதலில் அறிந்து கொள்வோம். அதன் பின் மன்னிப்புப் பற்றி ஆராய்வோம் எனத் தெரிவித்தார்.

# 104 குடும்பங்களையும் கடலிலே தள்ளி விடுங்கள் கேப்பாபுலவு மக்கள் கொந்தளிப்பு.




வடக்கு விஜயத்தை மேற்கொண்ட சிறீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவுக்கு விஜயம் செய்துள்ள நிலையில். கேப்பாபுலவு மக்கள் தங்கள் காணிகளை விடுவிக்ககோரி முல்லைத்தீவு நகரில் பொலீசாரின் பலத்த பாதுகாப்பு தடைகளுக்கு மத்தியில் கவனயீர்ப்பு போராட்டத்தை நேற்று முன்னெடுத்தார்கள். கேப்பாபுலவு மக்களின் காணி விடுவிப்பு தொடர்பில் சனாதிபதியோ பிரதமரோ பதில்கூறவில்லை என்றால் 104 குடும்பங்களையும் கடலிலே தள்ளி விடுங்கள் என்று மக்கள் கோசம் எழுப்பினார்கள். நாங்கள் நாளாந்தம் அணுஅணுவாக செத்துக்கொண்டு இருக்கின்றோம். எங்கள் வாழ்வாதாரம் முழுவதையும் படையினர் எடுத்துக்கொண்டு எங்களை தெருவில் விட்டுள்ளார்கள்.

கேப்பாபுலவு மக்கள் 716 ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்கள் தங்கள் பிரச்சனையினை பிரதமர் ரணிலுக்கு தெரிவிக்க வலியுறுத்தியும் தங்கள் நிலங்களை விடுவிக்ககோரியும் முல்லைத்தீவு வட்டுவாகல் வீதியில் பதாதைகளை தாங்கியவாறு கவனயீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்கள். இவர்களையும் பொலீசார் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் செல்வதற்கு தடை போட்டு தடுத்துள்ளார்கள். முல்லைத்தீவு நகரினை சுற்றி அதிகளவு பொலீசார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில் பிரதமர் ரணில் அவர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

9ஆம் பக்க தொடர்ச்சி ➔

**போர்க்குற்றத்தை சர்வதேசப் பொறிமுறையின் கீழ் விசாரிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டால் ...**

கதறியழுத போது அதைக் கண்டுகொள்ளாத சர்வதேசம் 10 ஆண்டுகளுக்குப் பின் மானுடத்திற்கெதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கெதிரான விசாரணைகளை நடத்தும் அல்லது தீர்வுகளை முன்வைக்கும் என்ற நம்பிக்கை இல்லை

போர்க்குற்றங்களோடு சம்பந்தப்பட்டவர்களை ஓர் சர்வதேசப் பொறிமுறையின் கீழ் விசாரிக்கும் ஏற்பாடொன்று செய்யப்பட்டால் இதுவரையில் எமது மக்களுக்கான உயிர்த்தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் செய்தவர்கள் என்றவகையில் ஜனநாயகப் போராளிகளான நாம் எமது போராளிகளின் சார்பில் எந்தவொரு மன்றையும் எதிர்கொள்ள தயாராகவே இருக்கின்றோம் அப்படியானநிலை ஒன்று ஏற்படுமிடத்து தமிழினத்திற்காய் இழைக்கப்பட்ட அனைத்து அநீதிகளுக்கும் பொறுப்புக்கூற வேண்டிய நிலை சிங்கள அரசுக்கும் உண்டு என்ற யதார்த்தமான உண்மையை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

7ஆம் பக்க தொடர்ச்சி ➔

## எமக்கான பாடம் எமது எதிரியிடமே உள்ளது. அதனை முதலில் கண்டறிவோமாக

சிறீதரனும், கோடீஸ்வரனும் ஜெனீவா கூட்டத்தொடரில் கலந்துகொண்டு தமிழ் மக்களுக்கு சிறீலங்கா அரசு இழைக்கும் அநீதிகளுக்கு எதிராக போராட வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தற்போதைய சிறீலங்கா அரசை பதவிக்கு கொண்டு வந்தவர்களே இவர்கள் தான்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர் நீதிமன்றம் சென்று பதவிக்கு கொண்டுவந்த ரணில் தலைமையிலான அரசுக்கு எதிராக போராடப்போவதாகக் கூறிக்கொண்டு இருவர் ஜெனீவாவுக்கு வரப்போகின்றனர்.

எனவே அவர்கள் ஜெனீவாவுக்கு வருவது என்பது தமிழ் மக்களை முட்டாள்களாக்கி ஏமாற்றும் செயல் என்பது தெளிவானது. அவர்களை நம்புவதற்கு என தற்போதும் ஒரு கூட்டம் உள்ளது என்பது தான் கவலையான விடயம். ஜெனீவாவுக்கு வரும் இவர்களை வரவேற்கும் புலம்பெயர் தமிழ் மக்களிடம் உள்ள இராஜதந்திரம் தான் என்ன?

சிறீலங்கா அரசு அபிவிருத்தி என்ற அஸ்த்திரத்தை தற்போது கையிலெடுத்துள்ளது. அதன் மூலம் இனஅழிப்பு, போர்க்குற்றம், அரசியல் தீர்வு என்ற அழுத்தங்களில் இருந்து தப்பிப்பிழைக்க வழிதேடுகின்றது. ஆனால் அதற்குரிய முழுமையான ஆதரவுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்குவதுடன், அபிவிருத்தி என்ற மாயைக்குள் தமிழ் மக்களின் விடுதலையை புதைக்க முற்பட்டு நிற்கின்றது. அதாவது சிறீலங்கா அரசை காப்பாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சிறீலங்கா அரசு வழங்கும் பிரதிஉபகாரம் அபிவிருத்தியாகும்.

அதன் வெளிப்பாடுகள்தான் சிறீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கிளிநொச்சிப் பயணமும், கிளிநொச்சி வைத்தியசாலையின் அபிவிருத்தியும், கூட்டமைப்பின் ஒத்துழைப்பும். தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அபிவிருத்திக்காக வாக்களிக்கவில்லை. அபிவிருத்தி என்பது ஒரு அரசின் கடமை.

அரசியல் தீர்வு, இனப்படுகொலைக்கான நீதி, சுதந்திரமான வாழ்வு என்பவற்றை முன்னிறுத்தியே தமிழ் மக்கள் தமது வாக்குகளை அளித்திருந்தனர். ஆனால் கூட்டமைப்பின் அரசியல் என்பது சிறீலங்கா அரசின் இராஜதந்திரத்தின் முன் முழுமையாக நீர்த்துப்போயுள்ளது.

அரசியல் இராஜதந்திரம் என்றால் என்ன?

எதிரியின் கூடாரத்திற்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதே அதன் முதல் அத்தியாயம்.

உதாரணமாக தற்போது மகிந்த ராஜபக்ச பிரதமர் நாற்காலியில் இருந்திருந்தால் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தொடரில் சிறீலங்கா தொடர்பான நிலைப்பாடுகள் தலைகீழாக மாற்றம் கண்டிருக்கும்.

சிறீலங்கா மீது கடுமையான தீர்மானங்களைக் கொண்டுவர அமெரிக்கா கடும் முயற்சிகளை எடுத்திருக்கும், பிரித்தானியாவும் கனடாவும் அதன் பின்னால் நின்று கால அவகாசத்தைத் தடுத்து சிறீலங்கா மீது கடுமையாக அழுத்தங்கள் பிரயோக்கிகப்பட்டிருக்கும்.

ஆனால் அது எல்லாவற்றையும் இல்லாது செய்துவிட்டது தமிழத் தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திரம். அதாவது எதிரியின் கூடாரம் தற்போது அமைதியாக உள்ளது. எனவே எமக்கு எதிராக சிந்தித்து செயலாற்ற அவர்களிடம் நிதானமும், நேரமும் உள்ளது.

ஆனால் தமிழ் மக்களின் புலம்பெயர் தளத்தின் கூடாரம் பல பிளவுகளைச் சந்தித்து சிதைந்துபோயுள்ளது.

போர் நிறைவடைந்து 10 ஆண்டுகள் அண்மித்துள்ள நிலையில், தமிழர் தரப்பு மிகப்பெரும் இராஜதந்திரத் தோல்வியைச் சந்தித்துள்ளது என்பதே எதிர்வரும் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் சிறீலங்கா அரசு பெறப்போகும் கால அவகாசத்தின் பொருள். அதாவது விடுதலைப் போர் ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளதுடன், கடந்த 10 ஆண்டுகளில் நாம் எதனையும் சாதிக்கவில்லை என்பதே உண்மையாகும்.

உண்மை கசப்பாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதன் மூலம் தான் நாம் அடுத்த நகர்வை சரியாக எடுத்து வைக்க முடியும்.

எனவே அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதே எம் முன் உள்ள தற்போதைய மில்லியன் டொலர் கேள்வி.

நாம் போராட வேண்டிய இலக்கு வேறு, சிறீலங்கா தூதரகம் அல்ல. கனடா மக்கள் கனேடிய அரசின் நயவஞ்சகத்திற்கு எதிராக போராட வேண்டும். பிரித்தானிய மக்கள் பிரித்தானிய அரசிடம் நியாயம் கேட்கவேண்டும்.

தமிழ் அமைப்புக்கள் ஓரணியில் இணைந்து உலகில் உள்ள நாடுகளின் கதவுகளைத் தட்டவேண்டும், இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் எமது போராட்ட அல்லது இராஜதந்திர அணுகுமுறைகளின் எல்லைகளுக்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

பிரித்தானியாவின் நயவஞ்சகத்திற்கு எதிரான மனுக்களை தாயகம், தமிழகம், புலம்பெயர் அமைப்புக்கள் ஊடாக உலக நாடுகளிடம் வழங்கவேண்டும்.

ரஷ்யாவுடன் இறுக்கமான பிணைப்புக்களைக் கொண்ட சிரியா தற்போது தப்பிப்பிழைத்துள்ளது, சீனாவுடனும், மேற்குலகத்துடனும் சமாந்தரமாக உறவுகளைப் பேணும் சிறீலங்கா பல வெற்றிகளைக் குவித்து வருகின்றது. எமக்கான பாடம் எமது எதிரியிடமே உள்ளது. அதனை முதலில் கண்டறிவோமாக.

# நாகர்கோவில் பகுதியில் மேலும் 3 மோட்டார் குண்டுகள் மீட்பு

நாகர்கோவில் பகுதியிலிருந்து மேலும் மூன்று குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நாகர்கோவில் மேற்கு பகுதியில் 120 மில்லிமீற்றர் மோட்டார் குண்டு மீட்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றைய தினம் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் 81 மில்லி மீற்றர் குண்டுகளை மீட்டுள்ளதுடன், அவற்றை மணற்காட்டு பகுதியில் வைத்து செயலிழக்கச் செய்துள்ளனர்.



# பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோரும் விண்ணப்பதாரிகளுக்கு புதிய சட்ட விதிகள்.!

அகதி அந்தஸ்து கோரும் விண்ணபதாரிகளால் சமர்ப்பிக்கப்படும் சான்றுகளை பரிசீலனை செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து பிரித்தானிய மேன்முறையீட்டு நீதிமன்றம் புதிய சட்ட விதிகளை எடுத்துரைத்துள்ளது.

கிழக்கு இலண்டனிலிருக்கும் யோர்க் சட்ட நிறுவனத்தினால் அகதி விண்ணப்பதாரி ஒருவர் சார்பாக அந்த நாட்டின் உள்நாட்டு செயலாளருக்கு எதிராக பிரித்தானிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு விசாரணையின் பின்னர் முக்கிய சட்ட விதிகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.

வழங்கப்பட்டுள்ள இப்பரிந்துரையின்படி, பிரித்தானியாவில் தஞ்சம் கோரும் இலங்கையர்களது விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் போது உள்நாட்டு திணைக்களம் மற்றும் கீழ் நிலை நீதிமன்றங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கையிலிருந்து அகதி அந்தஸ்து கோரும் விண்ணபதாரிகளின் கோரிக்கையை பரிசீலிக்கும் போது அவர்கள் இலங்கையில் தாம் எதிர்நோக்கும் உயிராபத்து மற்றும்



சித்திரவதைகள் தொடர்பாக எவ்வாறான கோரிக்கையை முன்வைத்தாலும், அவர்கள் எவற்றிற்கெதிராக முறையிடுகின்றார்களோ அவர்களால் எவ்வாறு பார்க்கப்படுகின்றார்கள் என்பதே கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அதேவேளை, அவர்களால் சமர்ப்பிக்கப்படும் சான்றுகளை பரிசீலனை செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் நீதிமன்றம் புதிய சட்ட விதிகளை கோடிட்டுக்காட்டியுள்ளது. சமர்ப்பிக்கப்படும் சான்றுகளை நிராகரிப்பதாயின் அதற்கான போதிய காரணங்களை எடுத்துக்கூற வேண்டும், தவறும் பட்சத்தில் அம்முடிவு சட்டத்தின் முன் செல்லுபடியாகாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. நீதிமன்றத்தின் இப்பரிந்துரையின்படி, உள்நாட்டு திணைக்களத்தினால் போதிய காரணம் தரப்படாமல் நிராகரிக்கப்படும் அகதி விண்ணப்பங்களை நீதிமன்றில் மேன்முறையீடு செய்து பரிகாரம் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நீதிமன்றத்தின் குறித்த தீர்ப்பானது இலங்கை அகதிகளின் விண்ணப்பத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

6ஆம் பக்க தொடர்ச்சி ➔

# தலைமை ஏற்கும் பிரித்தானியா தமிழருக்கு சாதகமா?

எதிரான தாக்கமான விடயங்கள் ஏதும் இடம்பெற்றிருக்கக்கூடிய ஏதுநிலை எதுவும் தென்படவில்லை. கால நீட்டிப்பு வழங்கப்படுவது உறுதி என்றே தெரியவருகிறது.

சிறிலங்கா அரச தரப்பானது முன்னர் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவுசெய்வதில் அக்கறையேதும் காட்டவில்லையாயினும், தனது துறைசார் நிபுணர்களை நன்கு பயன்படுத்தி பல நாடுகளின் சர்வதேச அமைப்புகளின் ஒருங்கிசைவை பெறுவதில் வெற்றி கண்டுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது. இந்த முயற்சியில் சிறிலங்கா தனது படையப் புலனாய்வு பிரிவினரையும் நன்கு பயன்படுத்தி வருவதாகவும் தெரிகிறது. ஒட்டுக்குழுச் செயற்பாடுகளை வழிநடத்திய முன்னாள் படைய புலனாய்வு இயக்குனர் ஒருவர் தலைமையில் பல்வேறு மட்டங்களில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இவ்வாறு இன்றைய நிலைமையில் ஜெனிவா நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிடத்தக்க சாதகமான விடயங்கள் ஏதும் நிகழ்ந்துவிடப்போவதில்லை என்ற நிலைமை இருக்கின்ற போதும் தமிழர்கள் தங்கள் நீதிக்கான , உரிமைக்கான போராட்ட தளங்களில் சலிப்படைந்து விடலாகாது. உலகெங்கும் உள்ள தமிழர்கள் தமது முயற்சிகளை தாக்கமான வழிகளில் ஒருங்கிணைத்து செயற்படவேண்டிய காலமிது.

கனடா, பிரித்தானியா, ஜெர்மனி போன்ற மையக்குழுவில் உள்ள நாடுகளில் தமிழர்கள் பரந்தளவில் வாழ்கின்றனர். கனடா நாட்டில் மிக அதிகளவான தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். கனடா அரசு தமிழர்கள் தொடர்பில் அக்கறைகொண்டு செயற்படுவதாக அவர்கள் நம்புகின்றனர். கனடா அரசியலிலும் கூட தமிழர்கள் செல்வாக்குச் செலுத்துகின்றனர். இந்த வகையில் கனடாவின் தமிழர் சமூகத்தின் தீர்க்கமான செயற்பாடுகள் மிக அவசியமாகின்றன. இதேபோல் பிரித்தானியாவிலும் செல்வாக்குள்ள தமிழ்ச் சமூகம் உள்ளது. அங்கும் எமது மனித உரிமைக்கான செயற்பாடுகள், நீதிக்கான தேடல்கள் தொடர்பில் மேலும்




தீவிரமான செயற்பாடுகள் அவசியமாகின்றன. இவ்வாறே அனைத்து நாடுகளிலும் உள்ள தமிழ் சமூகங்களும் தத்தம் நாடுகளில் நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

அரசியலணைவு நாடுதல்(lobbying)என்ற விடயத்தில் தமிழர் தரப்பு அனைத்து நாடுகளிற்கும் தனது செயற்பாட்டை விரிவுபடுத்தவேண்டும். சிறிலங்காவின் சதித்திட்டங்களை முன்னறிந்து அதற்கேற்ற வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

சிதறிக்கிடக்கும் தமிழரின் பல்துறை வளங்கள், நிபுணத்துவம் என்பன ஒன்றிணைக்கப்பட்டு தமிழர்கள் ஒரே தளத்தில் நின்று மனிதவுரிமைகளுக்காக, நீதிக்காக குரல்கொடுக்கும்போதே அது வலுவானதாக, தாக்கமானதாக அமையும். இதுவே இன்றைய நிலையில் தமிழருக்கு இருக்கக்கூடிய ஒரே வாய்ப்பாகும்.

# இந்தியர்களின் கொந்தளிப்பு என் இதயத்தில் தீயாக எரிகிறது - மோடி ஆவேசம்



புல்வாமா தாக்குதலில் 40 இராணுவத்தினரை பறிகொடுத்த இந்தியர்களின் கொந்தளிப்பு என் இதயத்திலும் தீயாக எரிந்து கொண்டிருக்கிறது என இந்திய பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

டெல்லியில் இருந்து அரசுமுறை பயணமாக இன்று பீகார் மாநிலம், பரவுனி நகருக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி பாட்னா நகரத்தில் மக்கள் நல திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, புல்வாமா தாக்குதலில் மரணம் அடைந்த பீகார் மாநிலம், பாட்னாவை சேர்ந்த சஞ்சய் குமார் சின்ஹா மற்றும் பாகல்பூர் பகுதியை சேர்ந்த ரத்தன் குமார் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தியதோடு அவர்களின் குடும்பத்தாருக்கு தனது இரங்கல்களை தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார். மேலும் தனது உரையில், புல்வாமா தாக்குதலால் உங்கள் நெஞ்சில் கொந்தளிக்கும் நெருப்பு என்னுடைய இதயத்திலும் எரிந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கு கூடியுள்ள மக்களுக்கு நான் தெரிவித்து கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் பீகார் முதல் மந்திரி நிதிஷ் குமார் மற்றும் மத்திய, மாநில மந்திரிகள் பங்கேற்றனர்

## புல்வாமாவில் பலியான இராணுவத்தின் குடும்பங்களுக்காக நிதி திரட்டும் நடிகர் சல்மான் கான்



புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த 40 இராணுவத்தினரின் குடும்பங்களுக்காக தனது தொண்டு நிறுவனத்தின் மூலம் நடிகர் சல்மான் கான் நிதி திரட்டி வருகிறார். புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த வீரர்களின் குடும்பங்களுக்கு மாநில அரசுகளும் தனிநபர்களும் பெருமளவில் நிதியுதவி செய்து வருகின்றனர். இந்தி நடிகர் அமிதாப் பச்சன் மரணமடைந்த 40 இராணுவத்தினரின் குடும்பங்களுக்கும் தலா 5 லட்சம் ரூபாய் அளிப்பதாக அறிவித்தார். இந்த வரிசையில் இந்தி திரையுலகின் முக்கிய கதாநாயகர்களில் ஒருவராக உள்ள சல்மான் கானும் தற்போது இணைந்துள்ளார். தனது ‘பீயிங் ஹியூமன்’ (Being Human) அறக்கட்டளை மூலம் நடிகர் சல்மான் கான் நிதி திரட்டி வருகிறார். சல்மான் கானின் இந்த முயற்சிக்கு இந்திய மத்திய உள்துறை இணை மந்திரி கிரண் ரிஜுஜு பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளார்.

### இந்திய இராணுவத்தை கொன்ற பாக்கிஸ்தானுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று இணையத்தளங்களில் இந்திய இளைஞர்கள் கொந்தளிப்பு.



இந்திய இராணுவத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலை தொடர்ந்து இந்திய இளைஞர்கள் சமூக வலைத்தளங்களில் பலர் கருத்ததையும் எதிர்ப்பையும் வெளியிட்டு வருகின்றனர். உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து இந்த தாக்குதல் குறித்து பலர் விவாதித்தும் எதிர்ப்புக்களையும் வெளியிட்டும் வருகின்ற காரணத்தினால் உலகின் சிறந்த கழிவறை காகிதம் என கூகிளில் தேடினால் பாக்கிஸ்தான் நாட்டின் தேசிய கொடி வரும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. அந்த அளவுக்கு இந்திய இளைஞர்கள் கடும் கோபத்தில் தகவல்களை பதிவேற்றம் செய்து வருகின்றனர். தமது இராணுவத்தினரை கோழைத்தனமாக குண்டு வைத்து கொலை செய்துள்ளார்கள் என்ற செய்தியை கேட்டு பலரும் பாக்கிஸ்தானுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும் என்றும் தமது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். எப்போது இந்தியா பதிலடி கொடுக்கும் என்று எதிர்பார்த்து இளைஞர்கள் தகவல்களை பரப்பி வருகின்றனர். அத்துடன் இராணுவத்துக்கு முழு சுதந்திரம் கொடுத்தாகிவிட்டது என்ற மோடியின் கருத்துக்கு பலர் ஆதரவு தெரிவித்து வரும் நிலையில் இந்தியா பாக்கிஸ்தானை தாக்குவது எப்போது என்றும் குற்றவாளி எங்கே என்றும் ஆவேசமாக கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

## இந்திய வீரர்களை கொன்ற பாக்கிஸ்தான் மீது தாக்குதல் நடத்த தயார் நிலையில் விமானப்படை



பாக்கிஸ்தான் தீவிரவாதிகள் இந்திய வீரர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலை தொடர்ந்து பாக்கிஸ்தான் மீது தாக்குதல் நடத்தும் நோக்கில் இந்தியாவில் போர் பயிற்சி ஆரம்பமாகியுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் இந்திய விமான படையின் போர்ப் பயிற்சி நேற்று முன்தினம் ராஜஸ்தான் மாநிலத்தில் ஆரம்பித்துள்ளது. இதில் 8 விமானத்தளங்களில் இருந்து 137 விமனங்கள் பங்கேற்றுள்ளன.

குறிப்பிட்ட இலக்குகளை குண்டு வீசி தகர்க்கும் வகையில் நடைபெற்ற இந்த பயிற்சியில் இந்திய விமான படையின் அதிசக்தி வாய்ந்த விமானங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவின் சக்தியை வெளிக்காட்டும் வகையில் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விமானப்படை தளபதி பி.எஸ்.தனோ தெரிவித்துள்ளார்.

## தாக்குதலில் பலியான இந்திய இராணுவத்தினர் சடலத்துடன் செல்பி? சர்ச்சையில் மத்திய அமைச்சர்



புல்வாமா தாக்குதலில் இறந்த கேரள இராணுவ வீரரின் சடலத்துடன் இந்திய மத்திய அமைச்சர் அல்போன்ஸ் செல்பி எடுத்ததாக சர்ச்சை வெடித்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் ஜெய்ஷ் இ முகமது இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதி நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 40 சிஆர்பிஎப் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இது இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது.

இந்நிலையில் புல்வாமா தாக்குதலில் இறந்த கேரள வீரர் ஒருவரின் சடலத்துடன் பாஜகவைச் சேர்ந்த மத்திய அமைச்சர் அல்போன்ஸ் கண்ணன்தானம் செல்பி எடுத்ததாக சர்ச்சை வெடித்துள்ளது.

அவர்களோடு மத்திய அமைச்சர் அல்போன்ஸ் கண்ணன்தானமும் இறுதி அஞ்சலி செலுத்தினார். அப்போது எடுத்த புகைப்படம் ஒன்று தற்போது சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

அதில் அவர் சடலத்துடன் செல்பி எடுத்துள்ளார் என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன. கடுமையான விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில், நான் செல்பி எடுக்கவில்லை என்று அமைச்சர் அல்போன்ஸ் கண்ணன்தானம் மறுப்பு தெரிவித்துள்ளார்.

# சுதந்திர தனி நாடு கோரிக்கை: மீண்டும் களமிறங்கிய கேட்டலோனியா மக்கள்




கேட்டலோனியா பிரிவினைவாத தலைவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதை எதிர்த்து ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் பேரணியை நடத்தினர்.

சுமார் இரண்டு லட்சம் பேர் பங்கேற்றதாக கருதப்படும் இந்த பேரணியின்போது, கேட்டலன் கொடியை ஏந்திக்கொண்டு, தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் 12 பிரிவினைவாத தலைவர்களுக்கு ஆதரவான முழக்கங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

ஸ்பெனிலிருந்து கேட்டலோனியாவை பிரித்து தனி நாடாக்கும் வகையில், கடந்த 2017ஆம் ஆண்டு அக்டோபர் நடத்தப்பட்டு, தோல்வியடைந்த பொதுமக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை தொடர்ந்து, அந்த கோரிக்கையை முன்னெடுத்த தலைவர்கள் மீதான விசாரணை மாட்ரிட் நகரத்திலுள்ள உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

பிரிவினைவாத தலைவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், சிலர் அதிகபட்சமாக 25 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடலாம்.

ஸ்பெயின் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை கேட்டலன் பிரிவினைவாதிகள் சமீபத்தில் விலக்கிக்கொண்டதால், அந்நாட்டு நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும் முன்னரே தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மலேசியாவுக்கு கடத்தப்படவிருந்த 43 ரோஹிங்கியா அகதிகள் வங்கதேசத்தில் மீட்பு

வங்கதேசத்திலிருந்து மலேசியாவுக்கு படகு வழியாக கடத்தப்படவிருந்த 43 ரோஹிங்கியா அகதிகளை சில தினங்களுக்கு முன் ஆட்கடத்தல்காரர்கள் வசமிருந்து வங்கதேச காவல்துறை மீட்டுள்ளது. இப்படி கடந்த ஒரு வாரத்துக்குள் 100க்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2015ம் ஆண்டுக்கு முன்னதாக மலேசியாவுக்கு பல ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா அகதிகள் ஆட்கடத்தல்காரர்கள் கடத்தப்படுவது வாடிக்கையான சம்பவங்களாக நிகழ்ந்து வந்தன. இதற்கிடையே தாய்லாந்தில் அகதிகள் உடல்களைக் கொண்ட புதைக்குழி கண்டறியப்பட்ட பின் வங்கதேசம் எடுத்து தடுப்பு நடவடிக்கையால் ஆட்கடத்தல் சம்பவங்கள் காலப்போக்கில் குறைந்திருந்தன. இப்போது அவ்வாறான சம்பவங்கள் மீண்டும் அரங்கேற ஆரம்பித்துள்ளன.

கடந்த பிப்ரவரி 14ம் தேதி, வங்கதேச சிறப்பு காவல்படையினரால் காக்ஸ் பஜார் பகுதியிலிருந்த ஒரு வீட்டிலிருந்து 12 ரோஹிங்கியா இளம் பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர். மலேசியாவுக்கு அனுப்புவதாக ஆசைவார்த்தைக்கூறி இப்பெண்களை கடத்திய ஆட்கடத்தல்காரர்கள் பெண்களின் சம்மதமின்றி காக்ஸ் பஜாரில் உள்ள ஒரு வீட்டில் அடைத்து வைத்திருந்துள்ளனர். இப்பெண்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, இச்சம்பவம் தொடர்பில் இரு ஆட்கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது போன்று வங்கதேசத்தில் ரோஹிங்கியா அகதி முகாம்கள் அமைந்திருக்கும் சுற்றுவட்டார பகுதிகளில் மலேசியாவுக்கு செல்ல முயன்ற நூற்றுக்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகள் ஆங்காங்கே மீட்கப்பட்டுள்ளனர். மலேசியா செல்லும் முயற்சியினை அபாயகரமான அறிகுறி எனக்குறிப்பிட்டுள்ள வங்கதேச இடப்பெயர்வு ஆய்வாளர் தஸ்னீம் சித்திக்யு, "மோசமான நிலையில் வாழும் ரோஹிங்கியா அகதிகள் நல்ல எதிர்காலத்தை தேடிச்செல முயற்சிப்பது இயற்கையானது" எனக்கூறியுள்ளார்.

# தாய்லாந்து தேர்தலில் பிரதமர் வேட்பாளராக களமிறங்கிய திருநங்கை



தாய்லாந்தில் அடுத்த மாதம் (மார்ச்) 24-ந்தேதி நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடக்கிறது. இதற்காக அங்குள்ள பிரதான கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு உள்ளன. இதில் நாட்டின் பிரபல கட்சிகளில் ஒன்றான மகாசோன் கட்சி, பவுலின் காம்ப்ரிங் (வயது 52) என்ற திருநங்கையை பிரதமர் வேட்பாளராக நிறுத்தி உள்ளது. கடந்த 3 ஆண்டுக்கு முன்பு வரை பினித் காம்ப்ரிங் என்ற பெயரில் ஆணாக இருந்து 2 குழந்தைகளுக்கு தந்தையாகவும் இருந்த இவர், பத்திரிகையாளராகவும், தொழிலதிபராகவும் இருந்தார். கால்பந்து ரசிகர் கூட்டமைப்பை நிறுவி தாய்லாந்து விளையாட்டு துறையிலும் புகழ்பெற்று விளங்கினார். பின்னர் பாலின மாற்று அறுவை சிகிச்சை மூலம் பெண்ணாக மாறி தனது பெயரையும் பவுலின் என மாற்றிக்கொண்டார்.

தாய்லாந்து பிரதமர் தேர்தலில் 3 பிரதான வேட்பாளர்களில் ஒருவராகவும், முதல் திருநங்கை வேட்பாளராகவும் களமிறங்கி இருக்கும் பவுலின் காம்ப்ரிங் தனது பிரசாரத்தை தொடங்கி உள்ளார். தான் வெற்றி பெறவில்லை என்றாலும், அடுத்த தலைமுறையிலாவது திருநங்கை ஒருவர் நாட்டின் தலைவராக வருவார் என்று அவர் கூறினார்.

# போர் காரணமாக ஆண்டுக்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமாக குழந்தைகள் கொல்லப்படுகின்றனர்

உலக அளவில், ஒவ்வொரு ஆண்டும் ஆயுத மோதல்கள் மற்றும் அதன் தாக்கத்தினாலும் பசிப் பட்டினியாலும் உயிரிழக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. சர்வதேச அளவில் குழந்தைகளைக் காப்போம் என்ற அறைகூவலோடு இயங்கிவரும் சேவ் தி சில்ட்ரன்ஸ் இன்டர்நேஷனல் இப்புள்ளிவிவரத்தைத் தெரிவித்துள்ளது. ஜெர்மனியில் உள்ள முனிச் நகரத்தில் சமீபத்தில் குழந்தைகள் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. இதில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விவரம்: உலகில் அதிகப்பட்சமாக குறிப்பிட்ட 10 நாடுகளில் அதிகபட்ச அளவில் இந்த உயிரிழப்புகள் நேர்கின்றன. ஆப்கானிஸ்தான், மத்திய ஆபிரிக்க குடியரசு, காங்கோ ஜனநாயகக் குடியரசு, ஈராக், மாலி, நைஜீரியா, சோமாலியா, தெற்கு சூடான், சிரியா மற்றும் ஏமன் ஆகிய நாடுகளிலேயே இவ்வகையில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளாகும். இந்த குறிப்பிட்ட நாடுகளில் மட்டும் 2013 லிருந்து 2017 வரையிலான இடைப்பட்ட காலங்களில் 5 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் இறந்துள்ளன.

உலகில் உள்ள ஐந்து குழந்தைகளில் ஒன்று எந்த நேரத்திலும் போர்வெடிக்கும் அல்லது போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலேயே கடந்த இருபதாண்டுகளாக வாழ நேரிடுகிறது. கொல்லப்பட்ட அல்லது ஊனமுற்ற குழந்தைகள்



எண்ணிக்கை மும்மடங்காக அதிகரித்துள்ளது, மேலும் போர்ஆயுதங்களையே உதவியாகப் பயன்படுத்தும் ஆபத்தும் இங்கு அதிகரித்து வருகிறது கடந்த ஐந்து ஆண்டுகளில் போர்ச்சூழலின் மறைமுக விளைவுகளினால் மட்டுமே 5 வயதுக்குள் இறந்த மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை 8 லட்சத்து 70 ஆயிரம் ஆகும்.

21 ஆம் நூற்றாண்டில் நாம் மிகவும் எளிமையான அறக்கொள்கைகள் மற்றும் தார்மீக நெறிகளிலிருந்து பின்னோக்கி செல்கிறோம் என்பதையே இந்த ஆய்வு தெரிவிக்கிறது. இது மிகவும் அதிர்ச்சியூட்டுகிறது - போரில் குழந்தைகளும் பொதுமக்களும் இலக்காகக் கூடாது என்பதை நினைவில் நிறுதத வேண்டும். இவ்வாறு முனிச் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட குழந்தைகள் காப்போம் சர்வதேச ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நூறு வருடம் காத்திருந்து எடுக்கப்பட்ட கருஞ் சிறுத்தை புகைப்படத்தின் கதை

ஆப்பிரிக்கக் கண்டத்தில் 'கருஞ் சிறுத்தை' இருந்ததற்கான தெளிவான ஆதாரம் கடைசியாகக் கிடைக்கப்பெற்றது 1909-இல்தான். ஆனால், இப்போது 100-க்கும் மேலான ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக ஆப்பிரிக்காவில் தெளிவாகப் படம்பிடிக்கப் பட்டுள்ளது இந்த 'கருஞ் சிறுத்தை'.





### இது எப்படிப் படம்பிடிக்கப்பட்டது?

கென்யாவின் லைகீபியாவின் வனப் பகுதியில் (Laikipia Wilderness Camp) ஒரு கருஞ்சிறுத்தை தென்படுவதாகக் கடந்த ஆண்டு முதல் பரவலாகப் பலரும் தெரிவித்து வந்தனர். இதை அறிந்த வில் புரார்ட் லூக்கஸ் என்னும் பிரிட்டிஷ் புகைப்படக் கலைஞர் அங்கு சென்றுள்ளார். இவர் மறைந்திருக்கும் மிருகங்களைத் தனது கமரா ட்ராப்கள் (camera trap) மூலம் பிடிப்பதில் வல்லவர். இவருக்கு இந்தக் கருஞ் சிறுத்தைகள் மீதான ஆர்வமும் அதிகமக இருந்திருக்கிறது. 2 ஆண்டுகளுக்கு முன்பு கூட இந்தியா வந்து கர்நாடகாவின் கபினி பகுதியில் ஒரு கருஞ் சிறுத்தையைப் படம் பிடித்திருக்கிறார் இவர். இந்த பிளாக் பேந்தர் புகைப்படம் எப்படி எடுக்கப்பட்டது என்பது குறித்து அவரிடம் மின்னஞ்சல் மூலம் பேசினோம்.

கென்யா சென்ற இவர் இவரது கமரா ட்ராப்புகள் கொண்டு இரவில் எப்படியாவது அந்தக் கருஞ்சிறுத்தையைப் புகைப்படம் எடுத்துவிட வேண்டும் எனக் களத்தில் இறங்கியுள்ளார். கிட்டத்தட்டப் பொறிவைத்து மிருகங்கள் பிடிப்பதைப் போன்றதுதான் இவரது இந்தப் புகைப்படம் எடுக்கும் பணியும். இதற்காக வயர்லெஸ் மோஷன் சென்சார் போன்ற பல சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. இவற்றை சிம்பிளாக எப்படிச் செய்யலாம் என்று வீடியோக்களும் பதிவிடுகிறார் கால்தடங்களை வைத்து ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சுற்றி இந்த ட்ராப்புகள் அனைத்தையும் செட் செய்திருக்கிறார் வில். அது கருஞ்சிறுத்தையா இல்லை சாதாரண சிறுத்தையா என்பதுகூட தெரியாமல் ஒரு தோராயமாகத்தான் இதைச் செய்திருக்கிறார். பின்பு இந்த அரிய விலங்கு நம் கமராவில் சிக்கிவிடாதா என்று காத்திருந்திருக்கிறார். முதல் மூன்று இரவுகளிலும் அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியிருக்கிறது. கமராக்களில் கழுதைப் புலிகள் தவிர வேறு எதுவும் பெரிதாகச் சிக்கவில்லை.

பின்பு 4-வது இரவிலும் பெரிதாக நம்பிக்கை எதுவுமின்றி அனைத்து கமராக்களையும் செக் செய்தார் அவர். முதலில் பார்த்த எந்த கமராவிலும் எதுவும் சிக்கியதாக இல்லை. சோர்ந்துபோன அவர் கடைசி கமராவை எடுத்துப் பார்த்தார். அவருக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் விதமாக சுமார் இரண்டு வயதான ஆண் கருஞ்சிறுத்தை ஒன்று அதில் படம்பிடிக்கப்பட்டிருந்தது. அப்படியே அந்தக் கருஞ்சிறுத்தையை அடுத்த சில நாள்களும் பின்தொடர்ந்து புகைப்படங்கள் எடுத்துள்ளார். இதன்மூலம் பல நாள்களாக வதந்தியாக மட்டும் இருந்த இந்தச் செய்தி உண்மை என நிரூபணம் ஆகியது. இந்த வனப்பகுதியில் உள்ள சிறுத்தை ஆராய்ச்சியாளரான நிக்கோலஸ் பில்ஃபோல்ட், "100 வருடங்களில் முதல்முறையாக ஆப்பிரிக்காவில் ஒரு கருஞ்சிறுத்தை புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.



2013-இலும் இதே போன்று ஒருவர் கருஞ்சிறுத்தையைப் புகைப்படம் எடுத்துள்ளார் என கென்ய நாளிதழ் ஒன்று பதிவிட்டிருந்ததற்கும் விளக்கம் அளித்துள்ளார் வில். "100 வருடங்களில் முதல் புகைப்படம் என்ற தகவல் தவறாக எடுத்துக்கொள்ளப்பட்டது, நிக்கோலஸ் பில்ஃபோல் இந்த வருடங்களில் இவற்றை உறுதிப்படுத்தக் கிடைத்த தெளிவான புகைப்படம் என்றுதான் அவர் கூற முற்பட்டுள்ளார். இத்தனை ஆண்டுகளில் இந்தத் துல்லியத்துடன் எடுக்கப்பட்ட முதல் புகைப்படங்கள் இவைதான்" என்றார்.

### கருஞ்சிறுத்தைகள் எப்படி உருவாகின்றன?

இது ஒரு தனி இனம் என்றே நாம் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அது அப்படி இல்லை. மெலனின் என்ற நிறமிகள் கிட்டத்தட்ட அனைத்து உயிரினங்களிடமும் இருக்கும். சில பூனைகள் கறுப்பு நிறத்தில் இருப்பதற்கு இவை அதிகமாக இருப்பதே காரணம். மனிதர்களிடமும் அப்படியே. இது ஒரு குறைபாடு கிடையாது. சொல்லப்போனால் இதனால் நன்மைகளே அதிகம். இந்த நிறமியின் குறைபாட்டால்தான் அல்பினோ போன்ற நோய்கள்கூட சிலருக்கு வருகின்றன. இந்த மெலனின் அதிகமாக இருப்பதால்தான் 'கருஞ் சிறுத்தை' என்னும் இந்தக் கருஞ்சி றுத்தைகளும் உருவாகின்றன. 'கருஞ் சிறுத்தை' என்பது பொதுவான ஒரு சொல். அந்தப் பகுதிகளில் எந்தெந்த சிறுத்தைகள் இருக்கின்றனவோ அதில் மெலனின் அதிகமாக இருக்கும் கருப்பானவற்றையே 'கருஞ் சிறுத்தை' என அழைக்கப்படுகின்றன. சிறுத்தைகளில் சுமார் 10% மட்டுமே இப்படிக் கருஞ்சிறுத்தைகளாக அமைகின்றன. சிறுத்தைகளைப் பார்ப்பதே அரிது. அதனால் இவற்றைப் பார்ப்பது மிகவும் அரிதென ஆகிவிட்டது. அடர்ந்த காடுகளில் மறைந்திருப்பதற்காகவே இவற்றுக்கு மெலனின் அதிகமாக இருக்கிறது என ஒரு கூற்று இருக்கிறது. எனவேதான் ஆசியா கண்டத்தில் ஒரு கணிசமான அளவில் இவை காணப்படுகின்றன. ஆப்பிரிக்காவில் திறந்தவெளி காடுகள்தான் அதிகம்.

வில் வைத்திருந்த கமரா ட்ராப்பில் கருஞ்சிறுத்தையுடன் இன்னொரு சாதாரண சிறுத்தையும் படம்பிடிக்கப்பட்டிருக்கிறது. சற்றே வயதான ஒன்றாக இது இருந்திருக்கிறது. இது கருஞ்சிறுத்தையின் தந்தையாக இருக்கலாம் எனப் பலரும் கணிக்கின்றனர். ஒரு கருஞ்சிறுத்தை பிறப்பதற்கு அதன் பெற்றோர்கள் கருஞ்சிறுத்தைகளாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. மெலனி சமிற்கான அந்த அரியவகை ஜீனை (Reces-sivegene)பெற்றோரில் ஏதேனும் ஒன்றுக்கு இருந்தால் போதும்.

இரவில் Infrared illumination மூலம் எடுக்கப்பட்ட புகைப் படங்களில் சாதாரண சிறுத்தைகளுக்கு இருப்பதைப் போல இந்தக் கருஞ்சிறுத்தைக்கும் புள்ளிகளும் இருப்பதையும் இதனால் பார்க்கலாம். காலையில் இவற்றை நம்மால் பார்க்க முடியாது. இந்த அரிய புகைப்படங்கள் இப்போது உலகமெங்கும் வைரலாகி வருகின்றன.